அன்பளிப்பு 40 p .



இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவன்
வழிகாட்டுகின்றான்.
இன்னும் என்ன தயக்கம்
எழுந்து வா .


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 24. 07. 1992


## நீதியான அமைதிக்காக பிரிட்டிஸ் பிரதமருக்கு மகஜர்.

### ஆடி 25ல் கையளிப்பு

இலண்டனில் ஆடி 25ம் திகதி நடைபெற இருக்கும் "நீதியான அமைதியை நோக்கி" ஊர்வலத்தின் பொழுது பிரிட்டிஸ் பிரதமர் ஜோன் மேஜர் அவர்களிடம் நீதியான அமைதிக்காக மகஜர் ஒன்றை கையளிக்க இருப்பதாக சர்வதேச தமிழர் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். இவ் ஊர்வலம் மதியம் 1.30 மணிக்கு கைட்பார்க்கில் ஆரம்பித்து ரவல்கர்ஸ்குயாரில் முடிவுறும். யூலை 83 இன அழிப்பின் 9வது நினைவாக இவ் ஊர்வலம் சர்வதேச தமிழர் சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ் ஊர்வலத்தில் கலை கலாச்சார அம்சங்களும் இடம்பெறவுள்ளது. ■

# இரண்டேமணி நேரத்தில்

# இராணுவமுகாம் புலிகள்வசம்!

## பலவேகய II படுதோல்வியில்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் மற்றொரு மைல் கல்! அதிகாலை நேரம், தமிழீ ...த்தின் எல்லைக் கிராமமான ...சட்டி குளத்திற்கு அருகேயுள்ள "காட்டுப் பொத்த" இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதல்கள் மிகப் பெரிய வெற்றியை அளித்துள் ...து. 55 இராணுவத்தினர் கொல் ...ப்பட்டும் 11 பேர் படுகாயமுற் ...ம் உள்ளனர் என முக்கூட்டுப் ...டைகளின் தலைமையகம் ஏற் ...றுக்கொண்டுள்ளது. அத்துடன் வேறு 11 பேரை பற்றி எதுவும் தெரியவில்லை எனவும் கையை விரித்துள்ளது. புலிகள் பெரும ளவிலான ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கைப்பற் றினர் என அறிவித்த இராணு வப் பேச்சாளர் இரண்டு கவச வாகனங்களையும் ஒரு புல்டோ ...ரையும் புலிகள் நாசமாக்கியுள் ...ளதாகவும் கட்டிடங்களை வெடிகுண்டு வைத்து தகர்த்து ...முழு இராணுவமுகாமையுமே ...ரித்து விட்டதாகவும் கூறினார்.

### பெண்புலிகளின் ஆற்றல்

...த் தாக்குதலில் ஈடுபட்ட ...பெண் புலிகளின் இராணுவ ஆற் ...றல்களை கண்டு இலங்கை ...இராணுவம் அதிர்ச்சியடைந்துள் ...ளதாக கொழும்புச் செய்திகள் ...தெரிவிக்கின்றன. இராணுவ ...முகாமுக்குள் புகுந்த பல பெண் ...புலிகள் கண்மூடி கண் திறப்பதற் ...குள் இராணுவத்தினரை தாக்கி அவர்களின் ஆயுதங்களை கைப் பற்றினர் என கொழும்பு இரா ணுவ வட்டாரங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. இரண்டே மணி நேரத்தில் ஒரு இராணுவ முகாமையே வீழ்த்திய புலிகளின் இராணுவவலிமை சிறிலங்கா இராணுவத்தை கதிகலங்கச் செய்துள்ளது.

பலவேய II என்ற பெயரில் தொடங்கப்பட்ட இராணுவ தாக் குதல்களை எதிர்த்து புலிகள் நடாத்திய தொடரான எதிர்த் தாக்குதல்களால் இராணுவத் தின் இத்திட்டம் முற்றாக நிலைகுலைந்துவிட்டது. எதிர் பார்த்ததற்கு மாறாக பல நூற்றுக் காணக்கான இராணுவத்தினரின் உயிரிழப்புக்கும், பல ஆயிரக்க ணக்கான இராணுவத்தினர் படுகாயமடைவதற்கும், பல இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் இராணுவத்த ளபாடங்களையும் இழப்பதற்கும், இப் பலவேய II காரணமாகிவிட் டதாக இராணுவ வட்டாரங்க ளில் கடும் ஆட்சேபணை கிளம் பியுள்ளது.

### மனித வலயப் பின்னணியில் உட்புகத் திட்டம்

பலவேய II படுதோல்வியை அடைந்ததை அடுத்து சிறி லங்கா இராணுவம் செய்வதறி யாது திகைத்து நிற்கின்றது. எப் படியேனும் குடாநாட்டைச் சுற்றி வர உள்ள கண்ணிவெடி பாது காவல் அரணை உடைப்ப தொன்றே குடாநாட்டுக்குள் புகுவதற்கான ஒரே வழியென சில இராணுவத் தந்திரிகள் கருதுகின்றனர். இதைச் செயற் படுத்துவதற்காக "ஆனையிறவு" பிரதான பாதையூடாகப் போக் குவரத்தைத் தொடங்கச் செய்ய வேண்டுமென இராணுவ ஆலோசகர்கள் படாதபாடு படு கின்றனர். மக்களை ஆனையி றவு பாதையூடாக போக்குவரத்து செய்ய வைத்தபின் அவர்களுக் குப் பின்னால் மனித வலயப் பின்னணியில் குடாநாடு நோக்கி இராணுவ அணிகளை நகர்த்த வேண்டுமெனவும் அப்படி நகர்த் துகையில் கண்ணிவெடிகளால் மக்கள் பாதிப்படைவரெனவும் ஆகவே புலிகள் தாமாகவே கண்ணி வெடிகளை அகற்றி பாதைகளைத் திறந்துவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாவார்கள் எனவும் இவ் இராணுவ ஆலோசகர்கள் சதித் திட்டம் தீட்டி வருகின்றனர்.

### செப்டம்பருக்குள்

சிறிலங்கா அரசு செப்டம்பர் மாதத்துக்குள் இராணுவ நடவ டிக்கைகளை நடாத்தி முடித்து விடவேண்டும் என இரகசிய கட்டளை ஒன்றை இராணுவத் திற்கு வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது. சில சர்வதேச நாடு கள், நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும்படி சிறிலங்கா அரசை கடுமையாக நெருக்குகின்றன. எனவே அடுத் தமுறை "இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதிக்கூட் டம்" நடைபெறுவதற்கு முன்பாக ஏதாவது செய்தேயாக வேண்டு மென்றநிலையில் சிறிலங்கா அரசு தவிக்கின்றது. விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்

தொடர்ச்சி 2ம் பக்கம் ....



தன்னாடி இராணுவமுகாம் தாக்குதலின் போது இறந்த இராணுவத்தினன், அருகில் விடுதலைப்புலி வீரர்கள்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# 83 யூலையிலும் 92 யூலையிலும்

**1983ம்** ஆண்டு யூலை 23ல் சிங்கள பௌத்த வெறிக்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் பலியாக்கப்பட்டனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன, தமிழர்கள் சொந்த மண்ணிலேயே வாழ்வும் வாழ்விடமும் மறுக்கப்பட்டு இரண்டாவது முறையாக பெருமளவில் அகதிகளாக்கப்பட்டனர். 1958 ல் சிங்கள பௌத்த காடையர்களால் தொடங்கப்பட்ட தமிழர்களையும் தமிழர் உடைமைகளையும் அழித்தொழிக்கும் பணி, காலத்துக்குக் காலம் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு, அரச ஆதரவுடன் 83 ல் இனப்படுகொலையாக வெள்ளிவிழாக் கொண்டாடியது. வெலிகடைச் சிறைச்சாலையில் அரசியல் விசாரணைக் கைதிகளாக சிறிலங்கா அரசு தடுத்து வைத்திருந்த 53 தமிழர்கள், பாதுகாவலிலேயே படுகொலை செய்யப்பட்டு கண் தோண்டப்பட்டும் அவயங்கள் வெட்டப்பட்டும் அவர்களது சடலங்கள் கூட அவமரியாதைக்குள்ளாகின.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சிங்கள பௌத்த வெறியர்களை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, சிறிலங்கா அரசு, சிறிலங்காவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக பேசுவது எழுதுவது கூட தண்டனைக்குரிய குற்றமென அரசியல் சாசனத்தின் ஆறாவது சரத்தை திருத்தியது. இதுவே தமிழீழ மக்களை ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் தமது உரிமைகளும் மண்ணும் மீட்கப்பட வேண்டும் என்ற நிலைக்கு இட்டுத் தள்ளியது.

1972 ல் தன்னிச்சையான முறையில் "நவரங்கலாவில்" சிங்கள பௌத்தர்கள் இயற்றி தமக்கு மேல் திணித்த அரசியல் சாசனத்தை தமிழீழ மக்கள் ஜனநாயக வழிகளில் எதிர்த்தனர். அவ்வெதிர்ப்புகளை ஆயுத படைகளைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு நசுக்கி வந்தது. இனமான அரசியல் விழிப்புணர்ச்சியுற்ற, தமிழ் இளைஞர்களை சிறைகளில் அடைத்தும் தமிழர்களை, மனித வதைகளுக்குள்ளாக்கியும் ஜனநாயக எதிர்ப்புக்களை மக்களின் பலவீனங்களாக சிறிலங்கா அரசு மாற்றியது. இதுவே மக்கள் ஆயுதப் போராளிகளாக மாற வழிவகுத்தது. இனத்தின் கோடரிக் காம்பாக திகழ்ந்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் துரையப்பாவின்,இனத் துரோகத்திற்கு 25. 07. 1975 ல் புதிய புலிகளால் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதின் மூலம் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்திற்கான, பிள்ளையார் சுழி போடப்பட்டது. புதிய புலிகள் வளர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனதும் அதிர்ச்சியுற்ற சிறிலங்கா அரசு 1978 ல் பயங்கரவாத தடைச்சட்டத்தினை அமுலாக்கியதும் 1980 களில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடங்கியதும், மக்களுக்கு மேலும் மேலும் ஆயுதப் போராட்டத்தின் தேவையை தெளிவாக்கியது.

1983 யூலை 15 ல் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைசிறந்த இராணுவ தளபதிகளில் ஒருவரான சாள்ஸ் அன்ரனி (சீலன்), இராணுவக் கூலிகளால் கொல்லப்பட்டார். இதன் தாக்கமாக இனப்படுகொலை புரியும் இராணுவ அணிகளில் ஒன்றான, " Four Four Bravo", மாதகலிலிருந்து யாழ் நகரை நோக்கி வரும்போது திருநெல்வேலியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் 23. 07. 83 ல் பதுங்கித் தாக்கப்பட்டது. இதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டு இருவர் படுகாயமுற்றனர்.

இச்சம்பவத்தால் புலிகள் விடுதலைப் போராட்டத்தின் சிற்பிகளாகி விட்டனர் என்பதை உணர்ந்த சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலை உணர்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, உண்மையைத் திரிபுபடுத்தி, இனப்படுகொலையை ஊக்கப்படுத்தி 1983 யூலை அனர்த்தங்களை நடாத்தியது.

இன்று 92 யூலையிலும் கூட உண்மையை திரிபுபடுத்தும் சிறிலங்கா அரசின் போக்கு இன்னும் மாறவில்லை. ஆனையிறவில் விடுதலைப்புலிகளால் Y 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்ற நடைமுறை உண்மையைக் கூட ஏற்க முடியாமல் திணறுகின்றது. பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற பெயரில் அரசியல் தீர்வுக்கான உண்மை நிலையை உருமாற்றப் பார்க்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசுவதொன்றே தீர்வுக்கு வழி என்கின்ற உண்மையையும் மூடி மறைக்கின்றது. அன்று சிங்கள பௌத்த காடையர்களை ஊக்கப்படுத்தி அரச ஆதரவுடன் இனப்படுகொலையை நடாத்தியது போல இன்று சிங்கள இராணுவத்தை ஊக்கப்படுத்தி தமிழீழப் பிரதேசத்தில் இனப்படுகொலைகளை நடாத்துகின்றது.

இந்நிலையில் அரச பயங்கரவாதத்தினாலும், இராணுவ இன அழிப்பு நடவடிக்கைகளினாலும், சர்வதேச நாடுகளிலும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள எமக்கு எமது மக்களின் உண்மை நிலையை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டிய சமுதாய கடமையுண்டு. இது புலம் பெயர்ந்த ஒவ்வொரு தமிழனினதும் மனசாட்சியின் அழைப்பாகும்.

## யுத்த சூன்ய பகுதியில் குண்டு வீச்சு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம்

யுத்த சூன்ய பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள சேந்தான்குளத்திலுள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள் மீது சிறீலங்கா விமானப் படை விமானங்கள் குண்டுவீசித் தாக்கியது சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து உணவுப் பொருட்களைக் கொண்டுவருவதற்காக சேந்தான் குளம் காங்கேசன் வீதி யுத்த சூன்ய பிரதேசமாக செயற்பட்டது. இப்பகுதியில் சிறீலங்கா ஆயுதப் படைகளோ அல்லது விடுதலைப் புலிகளோ போர்நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும், அவ்வாறு போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றால் 72 மணிநேர முன்னறிவித்தல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு உடன்பாடு காணப்பட்டது. இவ்வுடன்பாட்டில் சிறீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கைச்சாத்திட்டிருந்தன.

சிறீலங்கா குண்டு வீச்சு விமானங்கள் சேந்தான் குளத்திலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்களின் மீது தாக்குதல் நடத்தியபோது நான்கு போராளிகள் காயமடைந்தனர். இந்த நடவடிக்கையினை பாரதூரமான ஒப்பந்த மீறல் நடவடிக்கை என சுட்டிக் காட்டி யாழ். மாவட்ட சிறப்புத்தளபதி தமிழ்ச்செல்வன் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச சங்க பிரதிநிதிக்கு கடிதம் ஒன்றைக் கையளித்தார். ■

## தாளங்குடா படுகொலை குறித்து அஸ்ரப்

காத்தான்குடியிலிருந்து கல்முனைக்குச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று ஆயுதக் கோஸ்டி ஒன்றால் இடைமறிக்கப்பட்டு அதில் பிரயாணம் செய்த 19 முஸ்லிம்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் சிறிலங்கா பாதுகாப்புப் படையின் தூண்டுதலாக இருக்க வேண்டுமென்ற ஐயம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப்புக்கு எற்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் "சம்பந்தப்பட்ட வான் பாதுகாப்பு அனுமதி வழங்கப்படு முன்னரே பிரயாணத்தை ஆரம்பித்து விட்டதாக கூறப்பட்டது. வழமையான சூழ்நிலையில் எந்தவொரு வாகனமும் சோதனை நிலையங்களினால் கடந்து செல்ல அனுமதிக்கப்டுவதில்லை என்பதை நாம் சிறிலங்கா அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம் இதுவே அம்பாறை மட்டக்களப்பு மாவட்டப் பிரயாணிகளின் அனுபவமாகும். இது குறித்து விரிவான விசாரணை அவசியமானதாகும். அப்படுகொலைகளில் எல். ரி. ஈ. அல்லாத முஸ்லிம்-தமிழ் சமூகங்களை நிரந்திரமாப் பிரித்து வைப்பதில் சிரத்தையுடைய வேறு சில சக்திகளும் சம்பந்தப்பட்டிருக்கலாம். எனவே இது குறித்து ஆராயப்பட வேண்டும்." எனக் கூறியுள்ளார். இதன் மூலம் வடக்கு-கிழக்கு இணைப்பை விரும்பாத சக்திகளே இப்படுகொலைக்கு பொறுப்பு எனத் தெரியப் படுத்தியுள்ளார். இப்படுகொலையில் ஈடுபட்டோர் சீருடை அணிந்திருந்ததாகவும் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினரிடமுள்ள ரி-56 ரகத் துப்பாக்கிகளால் பிரயாணிகளின் தலைகளில் சுட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவைகளின் அடிப்படையில் நோக்குகையில் சிறிலங்கா அரசு தமிழ்-முஸ்லிம் கலவரத்தை தூண்டி, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான கருத்துருவாக்கத்தை உருவாக்கவே இத்தகைய சதி செயல்களைச் செய்கின்றது என்பது தெட்ட தெளிவாகின்றது. ■

## சென்னையில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம்

தமிழக வரலாற்றில் முதற் தடவையாக பல்லாயிரம் மக்கள் சென்னை இலங்கை பிரதித் தூதரகத்திற்கு முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கும் படியும் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைப் பிரதித் தூதரகத்தை அகற்றும் படியும் கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறிலங்கா அரசின் இராணுவ இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும், தலைவர் பிரபாகரனை வாழ்த்தியும் சுலோகங்களை கோஷித்த வண்ணமிருந்தனர். இந்திய மத்திய, தமிழக அரசின் கெடுபிடிகளுக்கும் பொலிஸ் அடக்கு முறைகளுக்கும் மத்தியில் இவ்வார்ப்பாட்டக்காரர்கள் எவ்வித அச்சமுமின்றி பிரமாண்டமான ஊர்வலமாக சென்னை இலங்கை பிரதித் தூதரகத்தை நோக்கி வந்தனர்.

திரு. பழ. நெடுமாறன், டாக்டர். ராமதாஸ், திரு. பெ. மணியரசன், திரு. பண்டுருட்டி இராமசந்திரன், திரு. சுபவீர பாண்டியன், பாவலர் பொஙஞ்சித்திரனார், திரு. சாலை இளந்திரையன், திரு. தியாகு, திரு. தீரன் போன்ற தலைவர்களுடன் எம். ஜி. ஆர், அண்ணா தி. மு. க. தலைவர் திருநாவுக்கரசும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ் ஊர்வலத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் பார்வையிட்ட பத்திரிகையாளர்கள் தமிழ் நாட்டு மக்களின் இனமான உணர்வை எந்த சக்தியாலும் தடுக்கவோ அடக்கவோ முடியாதெனவும், வேண்டுமென்றே போடப்பட்ட தடைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் ஆதரவையும், இன ஈடுபாட்டையும் பல மடங்கு பெருக்கி விட்டது எனவும் கூறியுள்ளனர். இவ் ஊர்வலத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் ஒழுங்கு செய்த டாக்டர் ராமதாஸ் இம் முயற்சி மிகப் பெரிய வெற்றி அளித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். ■

### இரண்டேமணி...

வதன் மூலம் தாம் விரும்பும் தீர்வை திணிக்கலாம் என பகற்கனவு காண்பதன் விளைவே, வடக்கு மீதான புதிய இராணுவ தாக்குதல்கள் ஆகும்.

### முகத்திரை கிழிந்தது

சமாதான தீர்வு ஒன்றை காண விரும்புவதாக சிறிலங்கா அரசு சர்வதேச சமூகத்திற்கு காட்டி வந்த போலிவேசம் கலைந்து விட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவை காட்டிக் காட்டியே ஏமாற்றி வந்தார் பிரேமதாசா. பாராளுமன்றத் தெரிவுக்குழு சிறுசிறு பிரச்சினைகளுக்கு கூட சிங்களபௌத்த பேரினவாதம் சார்ந்த தீர்வையே முன்வைக்க முயன்றது. இதனால் சிறிலங்கா அரசின் அடிவருடிகளாக நின்ற சில தமிழ்க்குழுக்களை கூட பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் திருப்தி செய்யமுடியாத நிலை காணப்படுகிறது, அத்துடன் சிங்களவர்களின் பிரதான கட்சிகளான ஐக்கியதேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டுமே வடக்கு -கிழக்கு இணைப்பை பகிரங்கமாக எதிர்க்கின்றன. எனவே பிரேமதாசா போட்ட அமைதி தீர்வு எனும் முகத்திரை காலத்தால் கிழிக்கப்பட்டுவிட்டது. இதனால் தற்போது தமது சுயருபமான பௌத்த சிங்கள வெறி, இராணுவ தீர்வு முயற்சி என்பவற்றை வெட்டவெளியாகவே ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஊக்கப்படுத்த தொடங்கியுள்ளன. சிங்கள பத்திரிகைகளும் பௌத்த சிங்கள வெறியையும் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பையும் வழங்கத் தொடங்கியுள்ளன.

### எந் நேரத்திலும் போர் மூளலாம்.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ பலத்துக்கும் மதிநுட்ப வழி நடத்தலுக்கும் அஞ்சி தற்காலிக யுத்தநிறுத்தத்தை சிறிலங்கா அரசு மேற்கொண்டாலும் அது நிரந்தரமான யுத்தநிறுத்தமல்ல. ஆட்சேர்ப்புக்கும் ஆயுதக்குவிப்புக்கும் கால அவகாசம் தேடும் முயற்சியே யாகும்.

### திருமலையில்

வெலிஓயா, திருகோணமலைப் பகுதிகளில் 340 கோடி ரூபா செலவில் சிங்களக் குடியேற்றங்களை சிறிலங்கா அரசு தொடங்கியுள்ளது. இதுவரை 3364 சிங்களக் குடும்பங்கள் இவ் ஆண்டில் இப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதற்கிடை திருகோணமலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன. திருமலை கந்தளாய் வீதி வழியாக சென்று கொண்டிருந்த இராணுவ அணியை விடுதலைப்புலிகளின் அதிரடிப்படை இடைமறித்து தாக்கியது. 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பாரிய இராணுவ வாகனங்கள் முற்றாக நாசமாகின. புலிகளுக்கு எதுவித இழப்புமின்றி நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் இரண்டு எல். எம். ஜி, 16 ஏ. கே ரகத்துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான தோட்டாக்கள், வெடிமருந்துகள் என்பவற்றை புலிகள் இராணுவ அணியிடமிருந்து கைப்பற்றினர்.

### விமானத்தளபதி தயக்கம்

இதற்கிடையில் Y8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதால் இராணுவத்திற்குத் துணை போக

தொடர்ச்சி 11ம் பக்கம் ....

# எங்கள் கல்வியை அழிக்காதீர்கள்

## - பெற்றோர்-மாணவர் மகஜர் -

கிளிநொச்சி
21. 02. 1992

சிறிலங்கா ஜனாதிபதி அவர்கட்கு,
சிறிலங்கா.

தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியில் தங்கள் அரசு காட்டும் அசிரத்தையையும், அநீதிகளையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து, தாங்கள் இதனை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள், பெற்றோர்கள் இம் மகஜரினை சமர்ப்பிக்கின்றோம்.

எமது கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வித் திணைக்களத்தின் கணிப்பீட்டின் படி வகுப்பறைக் கற்பித்தலுக்கு 1256 ஆசிரியர்கள் தேவையென கணிக்கப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களப் பதிவின்படி 881 ஆசிரியர்களே கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளனர். இவர்களில் ஏறக்குறைய 100 பேர் வரை நீண்ட கால லீவில் நிற்பதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் 475 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எமது மாவட்டம் ஓர் பின்தங்கிய மாவட்டமாகவும், கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய பௌதிக வளங்களை பற்றாக் குறையாகக் கொண்ட மாவட்டமாகவும் இருப்பதனால் ஆசிரியர் பற்றாக்குறை எமது மாவட்டச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் இடையூறாக உள்ளது. இதேபோன்று 36 பாடசாலைகளின் அதிபர் தரத்தில் அல்லாத ஆசிரியர்களே பதில் அதிபர்களாக கடமை புரிகின்றனர். அத்தோடு ஆசிரியர்கள் சேவைக்கால ஆலோசகர்கள் 15 பேர் இன்னும் நியமிக்கப்படாமல் உள்ளனர். இப் பற்றாக்குறைகள் எமது சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் இடையூறாக உள்ளது. எனவே இதனை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து எமது மாவட்டத்திற்கு வேண்டிய ஆசிரியர்களை நியமிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம். எமது மாவட்டத்தில் பல வருடங்களாக வேதனம் எதுவுமின்றி சேவையாற்றும் 138 தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென வேண்டுகின்றோம்.

தமிழ் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளின் போது பாடசாலைகளில் விமானக் குண்டு வீச்சுக்களினால் ஏற்படும் சேதங்களும், பாடசாலை மாணவர், ஆசிரியர்கள் படுகொலைகளும், கைது செய்யப்படுதல் போன்ற நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், தர்மபுரம் மகாவித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம், முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம், இயக்கி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஆனையிறவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன விமானப் படையின் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பரவலாக பாடசாலைகளின் பௌதிக வளங்கள் அழிக்கப்பட்டமையால் மாணவர்கள் கல்வி கற்பதற்கு பெரும் இடர்பாடுகளை அடைகின்றனர். அத்தோடு இராணுவத்தினர் பாடசாலைகளை இராணுவ முகாமாக மாற்றியதால் தடுவன்கொட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஆனையிறவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பூநகரி மகாவித்தியாலயம், செட்டியார் குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கௌதாரிமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் செயல் இழந்துள்ளன. எனவே இராணுவ நடவடிக்கையில் இருந்து பாடசாலைகளையும், மாணவர், ஆசிரியர்களையும் பாதுகாப்பதற்கு வேண்டிய உத்தரவாதத்தையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பரவலாகத் தமிழ் பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள் கைது செய்யப்படுவதையும், கொலை செய்யப்படுவதையும் நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் மீது இறுக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்கி அவர்களுடைய இயல்பான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும்படியும் வேண்டுகின்றோம். எமது பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள்; காகிதாதிகள் இவைகள் மீது விதிக்கப்பட்ட தடைகளை நீக்கி எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் படியும் வேண்டுகின்றோம்.

திட்டமிட்டபடி உரிய காலங்களில் பொதுப் பரீட்சைகளை நடாத்தி எமது மாணவர்கள் இடையூறின்றி தமது கல்வியைத் தொடர்வதற்கு உத்தரவாதம் அளித்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் படியும் கேட்டுக் கொள்கின்றோம். கடந்த வருடங்களில் நடாத்தப்பட வேண்டிய க. பொ. த. சாதாரண, உயர்தர பரீட்சைகள் பிற்போடப்பட்டமையால் எமது மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையின்மையும், அச்சமும், விரக்தியும் ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் உரிய காலங்களில் நடாத்தப்பட வேண்டிய பரீட்சைகளை எமது பிரதேசங்களில் நடாத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். பரீட்சைக் காலங்களில் ஊரடங்கு, விமானக் குண்டுவீச்சு, விமானரோந்து போன்ற நடவடிக்கைகளினால் பரீட்சைகளைக் குழப்பாமல் பாதுகாப்பான சூழ்நிலையில் பரீட்சைகளை நடாத்தி முடிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும்படியும் வேண்டுகின்றோம். கடந்த க. பொ. த. (சாதாரண) பரீட்சையின் போது பண்டிவிரிச்சானில் பரீட்சை நிலையம் மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சை வன்மையாக கண்டிப்பதுடன் எதிர்காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

எமது மாவட்டத்தில் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட வேண்டிய நிதிவளங்களை எவ்வித இடையூறுமின்றி வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள், மாணவர்களுக்கான பயிற்சிகள், ஆய்வுகூட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றை தென்னிலங்கை பாடசாலைகளுக்கு வழங்குவது போன்று வழங்கும்படியும், எமக்குரிய நிதிவளங்களையும் தடையின்றி வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு வேண்டிய நஸ்ட ஈட்டை வழங்கவும், தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படுவது போன்று எமது தமிழ் பேசும் மக்களுக்கும் இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்துக்களின் இழப்பு இவற்றிற்கு வழங்கப்பட வேண்டிய நஸ்ட ஈட்டை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் படியும் வேண்டுகின்றோம். மேற் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக உடனடித் தீர்வு மேற்கொள்ளாவிடில் எமது மாவட்ட முழு மாணவ சமுதாயமும் அரசுக்கு எதிராக புரட்சி செய்ய வேண்டிய நிலையை உருவாக்குவதற்கு வழி வகுப்பதாக முடியுமென்பதை தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமது மாணவ சமுதாயத்தின் வடிவிற்காக ஏங்கி நிற்கும் நாங்கள் (பத்தாயிரம் மாணவர்களும், பதினையாயிரம் பெற்றோர்களும்) இன்று இந்த ஆர்ப்பாட்ட பேரவையில் கலந்து கொண்டு அரசாங்க அதிபர்/ கல்விப் பணிப்பாளர் மூலம் தங்களுடைய மேலான கவனத்திற்கு இந்த மகஜரை அறியத் தருகின்றோம்.

ஒப்பம்:- க. குணசீலன், நி. குணரத்தினம்
மாணவர் பெற்றோர் சார்பில்

**பிரதிகள்.**

1. கௌரவ கல்வி அமைச்சர், சிறிலங்கா.
2. செயலாளர், ஐ. நா. சபை.
3. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்.
4. சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கம்.
5. ஐ. நா. அகதிகள் ஸ்தாபனம்.
6. யுனிசெப் நிறுவனம்.
7. சிறுவர் பாதுகாப்பு நிதியம், இங்கிலாந்து.
8. கல்விப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாணசபை.
9. அரசாங்க அதிபர், கிளிநொச்சி.
10. கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.
11. "ஒக்ஸ்பாம்" நிறுவனம், கொழும்பு.
12. "கெயர்" நிறுவனம், கொழும்பு.
13. "குவேர்க்க" சமாதான நிறுவனம், இங்கிலாந்து.

# இராணுவத்தினர் மீது நடவடிக்கையாம்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிறிலங்கா அரசால் ஈடுபடுத்தப்பட்டு வரும் சிங்கள இராணுவத்தினர் தப்பியோடும் எண்ணிக்கை 4000க்கும் அதிகமாகியுள்ளது. இதனால் தமது இராணுவத்தின் ஆட்பலம் குறைவதைக் கண்டு திகைக்கும் சிறிலங்கா அரசு தப்பியோடிய இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டத் தொடங்கியுள்ளது. தப்பியோடிய இராணுவத்தினரை தேடிக் கைது செய்யும் பணியில் இராணுவப் பொலிசாருடன் சிறிலங்காப் பொலிசாரும் சேர்ந்து ஈடுபடப்போவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் தப்பியோடிய இராணுவத்தினர் மீளவும் சேவையில் சேர கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# திருமலையில் தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் அழிப்பு.

திருகோணமலையில் தமிழரின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் மாற்றும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது என திருகோணமலை மாவட்ட அரசியல் நிருவாகப் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்களையும் பாரம்பரியங்களையும் அழித்து விட்டு அங்கு சிங்கள சமுதாயம் இருந்ததுபோல் காட்ட பௌத்த விகாரைகளையும் சிங்கள குடியேற்றங்களையும் அமைப்பதில் சிறிலங்கா அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

கிளிவெட்டி, 59ம் கட்டை, 13ம் கட்டை, பாலம்போட்டாறு, 11ம் கட்டை, ஜெயபுரம் போன்ற தமிழர் வாழ்ந்த முக்கிய வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இடங்களில் தமிழரின் வரலாற்றுப் பண்பாடுகள், சின்னங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன. முக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடமான கோணேசர் ஆலயம் பௌத்த மதகுருமாரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆலய வளவிலுள்ள வரலாற்றுச் சின்னங்கள்மீது பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் மட்டக்களப்பு எல்லைப்புறத்தில் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலையில் சிறிலங்கா அரசு தமிழருக்கு எதிரான யுத்தத்தை மட்டும் நடத்தவில்லை. தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் மறைக்கும் செயல்களும் தீவிரமாக நடத்தப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பேராசிரியர் சிவதம்பிக்கு மணிவிழாவில் தங்கப்பதக்கம்

பேராசிரியர் திரு. கா, சிவத்தம்பி அவர்களது மணிவிழா நல்லூர் திரு ஞானசம்பந்தர் ஆதினத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பியும் அவரது பாரியாரும் மங்கள இசை முழங்க அறிஞர்கள், நண்பர்கள் புடைசூழ ஆதின மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

தொடர்ந்து மங்கள இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மங்கள இசையைத் தொடந்து சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண ஜி. ஏ. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

பேராசிரியர் திரு. செ, சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. துரைராசா அவர்கள் பேராசிரியர் சிவத்தம்பிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் தங்கப்பதக்கமும் வழங்கினார். அத்துடன் சிறப்புரை ஒன்றையும் ஆற்றினார். தொடர்ந்து வாழ்த்துப்பா நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. அத்துடன் இவ்விழாவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. புதுவை ரத்தினதுரை, கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ் உட்பட பல்வேறு அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். இறுதியில் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி நன்றியுரை நிகழ்த்தினார்.

# அத்திவாரம் தொட்டு முகடுவரை தமிழர் வீடுகளில் அபகரிப்பு

திருமலையில் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கையிலும் தமிழர்கள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற வன்செயல்களில் தமிழர்களின் பாரம்பரிய கிராமங்களான சாம்பல் தீவு, கும்புறுப்பிட்டி, நிலாவெளி, குச்சவெளி, திரியாய், புல்மோட்டை ஆகிய பகுதிகள் முற்று முழுதாக சேதமாக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்த தமிழ் மக்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எதையும் அரசு இதுவரை எடுக்கவில்லை.

குறிப்பாக திருமலை நகர்ப் புறத்திலுள்ள வீரநகர் பகுதியில் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இங்கு தமிழர்களின் வீடுகளை பட்டப் பகலிலேயே உடைத்து அத்திவாரம் தொட்டு முகடுவரை கட்டிடப் பொருள்களை அபகரித்து சிங்கள மக்கள் வீடுகள் கட்டியுள்ளனர்.

# பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரமும் தமிழ் மக்கள் பலியாகிய விதமும்

2

**பிரிட்டிசார் ஆரம்பத்தில் தமிழர்களுக்கு ஆதரவளித்து பின்னர் "மன்னிங்" "டொனமூர்" அரசியல்திட்டங்களில் தமிழர்களுக்கு எதிரான போக்கில் நடந்தமைக்கு உரிய காரணங்களை அரசியல் விஞ்ஞான முறையில் நுணுக்கமாக அலசி ஆராயும் கட்டுரைத் தொடர். ■**

சென்ற இதழ் தொடர்ச்சி

சிறுபான்மை இனத்தவரான அருணாசலம் சிங்கள, தமிழ் இனங்களை இணைத்த வகையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் தோன்றிவிடும் என்று பிரித்தானியர் அச்சமடைந்ததால், அந்த உறவை உடைப்பதற்கு சிங்களவர்களுக்குச் "சார்பாக" நடத்தல் பொருத்தமுடையது எனக்கருதி 1929 ஆம் ஆண்டு அரசியற் சீர்திருத்தத்தினை உருவாக்கினார். அந்தக் கால கட்டத்தில் அருணாசலம் சில குறைபாடுகளுக்கு மத்தியிலும் முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்தார். அவர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் வாதப்பிரதிவாதத்துக்கு உரியவை. தமிழரும் சிங்களவரும் இணைந்த தேசிய வாதம் வெற்றிக்குரியதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இரு இனங்களும் இணைந்த தலைமை உருவாகிவிடுமா என்ற அச்சத்தை பிரித்தானியர் அடைந்தனர். எனவே, பிரித்தானியர் அருணாசலம் தலைமையைப் பார்த்து இன ஐக்கியம் உருவாகிவிடும் என அடைந்த அச்சத்தின் விளைவே சிங்களத் தலைவர்களை திருப்திப்படுத்தக் கூடியதான அரசியற் திருத்தத்தைச் செய்தமை ஆகும்.

ஆயினும் மிகக் குறுகிய காலத்தில் சிங்கள தமிழ்ப் பிரிவினை கைகூடியதை பிரித்தானியர் உணர்ந்தனர். அரசிற் பகைமை இருபக்கத் தலைவர்கள் மத்தியிலும் போதியளவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பகைமை வெற்றியளித்துள்ள சூழலில் பிரித்தானியர் மறுவழமாக யோசிக்கத் தலைப்பட்டனர். சிறுபான்மை இனங்களை வெற்றிகொள்ளக் கூடிய வகையில் பெரும்பான்மை இனத்தைப் பலப்படுத்தி விடுவது தமக்கு ஆபத்தானது என பிரித்தானியர் பின்பு எண்ணத் தலைப்பட்டனர்.

பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாக இருந்த டிவேன் செயர்க்கு (The Duke of Devonshire) மன்னிங் 1922 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி எழுதிய ஓர் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் பலமும் அரசியல் முக்கியத்துவமும் குறையும் வகையில் கண்டிச் சிங்களவரும், கரையோரச் சிங்களவரும் பிரதிநிதித்துவத்தில் மேலான பங்கு பலத்தைப் பெறக்கூடியதாக இன்றைய நிலை உள்ளது".

குடியேற்ற நாட்டுக்கான மந்திரி டிவோன்சயரின் ஆலோசனைப்படி மன்னிங் அரசியல் அமைப்புத் திட்டத்தில் 1924 ஆம் ஆண்டு மாற்றம் கொண்டு வந்தார். அருணாசலம் கோரியிருந்தபடி மேல் மாகாணத்தில் தமிழருக்கு என ஒதுக்கப்பட்ட ஒரு தொகுதி உருவாக்கப்பட்டது. கரையோரச் சிங்களவரின் தலைமையிலான இலங்கைத் தேசிய காங்கிரஸ் முன்வைத்த திட்டத்தை மன்னிங் நிராகரித்தார்.

மன்னிங்கின் புதிய அரசியல் அமைப்புத் திருத்தப்படி எந்த ஒரு சமூகமும் சட்ட நிருபண சபையில் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாதவாறு அமைத்தார். பெரும்பான்மையினருக்கு 50% ஆசனங்களாயின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் 50% ஆசனங்கள் என்ற வகையில் டிவோன்சயர் அமைத்தார். அந்தக் கொள்கையின் அடிப்படையில் மன்னிங் 1924 ஆம் ஆண்டுத் திட்டத்தை வகுத்தார். தனிப்பட்ட முறையில் எந்த ஓர் இனமும் பெரும்பான்மைப்பலம் அற்றதாக இருக்கின்ற போதும் அரசாங்கம் தனது நலனுக்கான எந்த ஒரு சட்டத்தையும் கொண்டு வந்து உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்கள், மற்றும் நியமன உறுப்பினர்கள், ஐரோப்பிய உறுப்பினர்கள் மற்றும் பறங்கியர் உறுப்பினர்கள் ஆகியோரின் வாக்கைப் பெற்று நிறைவேற்றக் கூடியதாகவும் வகை செய்யப்பட்டிருந்தது.

சரியோ பிழையோ மன்னிங்கின் இந்த அரசியற் திட்டத்தைக் கண்டு தமிழ்த் தலைவர்கள் திருப்தி அடைந்தனர். ஆனால் மிகச் சிறிய காலத்துக்குள் பிரித்தானியரின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இலங்கையின் ஆள்பதியாக இருந்த சேர். கியூவ் கிளிபேட் (Sir Hugh Clifford) இலங்கைக்கான அணுகு முறையில் மாற்றம் வேண்டுமென்று ஓர் இரகசிய அறிக்கையை பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியிடம் நேரடியாகச் சென்று 1926 ஆம் ஆண்டு சமர்ப்பித்தார். நீண்ட தீவிர ஆலோசனையின் பின்பு மறு ஆண்டு (1927) இலங்கைக்கு அனுப்பப்பட்ட டொனமூர் குழுவினர் உருவாக்கிய அரசியற் அமைப்புத் திட்டத்தின் பிரகாரம் தமிழர் அரசியலில் சக்தியற்றவர்களாக்கப்பட்டனர், எதனை நினைத்துக் கொண்டு, எவ்வாறு நிலைமையைப் புரிந்து கொண்டு தமிழரை நிர்க்கதியாக்கும் நிலையை டொனமூர் குழுவினர் உருவாக்கினர்?

நல்லநோக்கம், ஆனால் அதீத கற்பனையுடன் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1920 களின் மத்தியில் உதயமாகியது. மாணவர் காங்கிரஸின் உதயத்துடன் தமிழருக்கு எதிரான பிரித்தானியரின் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகியது எனலாம்.

இந்த மாணவ காங்கிரசின் பிரதம கர்த்தாவாக கன்ரி பேரின்பநாயகம் இருந்தார். இந்திய தேசிய காங்கிரஸினால் பெரிதும் கவரப்பட்டிருந்த இந்த மாணவர் காங்கிரஸ் காந்தியையும், ஜவகர்லால் நேருவையும் முன்னுதாரணம் மிக்க தலைவர்களாகக் கொண்டியங்கியது. இந்தியப் பாணியைப் பின்பற்றி இலங்கையில் தேசியப் போராட்டத்தை வளர்க்க விரும்பியது. இவர்களின் கதர் உடை அணியும் தன்மை இவர்களை நேரடியாக இந்தியாவுடன் அடையாளம் காட்டியது.

வகுப்பு வாதத்தைப் பெரிதும் எதிர்த்த இந்த மாணவர் காங்கிரஸ் தேசிய ஐக்கியம், ஐக்கிய இலங்கை போன்ற எண்ணங்களுக்காக பெரிதும் குரல்கொடுத்தது. மிகக் கோலாகலமாக ஆண்டுவிழாக்கள் கொண்டாடப்பட்டன. மூன்று நாட்கள் வரை நீடித்த அவ்விழாவில் அரசியற் கருத்தரங்குகள், விவாதங்கள் என்பன இடம்பெற்றன. 1925 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுவிழாவிற்கு சிங்களவரான பி. டி. எஸ். குலரத்ன தென் இலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்டார். 1927 ஆம் ஆண்டு மகாத்மாகாந்தியும், அதனைத் தொடர்ந்து சத்தியமூர்த்தி, கலியாணசுந்தரனார், கமலா தேவி, சட்டோபாத்தியாய போன்ற இந்தியத் தலைவர்களும் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு பல வகையிலும் முற்போக்குடனும் விழிப்புணர்வுடனும் அது காணப்பட்டது.

அக்காலத்தில் (1920 களின் மத்தியில்) இலங்கை முழுவதிலும் காணப்பட்ட எந்த ஒரு அரசியற் பகுதியினரையும் விட யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் கூடியளவு தேசியத் தன்மை கொண்டதும், விடுதலை எண்ணம் கொண்டதும், முற்போக்கானதுமாகும்.

இக்கால கட்டத்தில் இலங்கையின் ஆள்பதியாக இருந்த கியூவ் கிளி பேட்டிற்கு மாணவ காங்கிரஸின் நிகழ்வுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். 1910 களின் பிற்பகுதியில் சேர். பொன். அருணாசலம் தமிழ் சிங்கள இனங்களை இணைத்த தேசிய போராட்டத்திற்கு தலைமை தாங்க முற்பட்டது போல மீண்டும் தமிழர் பக்கம் இருந்து பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு எதிரான இலங்கையர் தேசியத்திற்கான அறிகுறிகள் தென்பட்டதை கிளிபேட் பெரிதும் கருத்தில் எடுத்திருக்க வேண்டும்.

பெரும் அரசியல் இடர் இலங்கையில் ஏற்பட்டிருப்பதாகக் கருதிய கியூவ் கிளிபேட், "நிலைமையை ஆராய்ந்து இடரைத் தாண்டி வெற்றி கொள்ளக் கூடிய சிறந்த வழிவகைகளைக் காண ஒரு விசாரணைக் குழுவை அமைக்குமாறு" பிரித்தானிய அரசைக் கோரினர்.

1924 ஆம் ஆண்டு அரசியல் திருத்தத்தை நீண்ட காலத்துக்கு நடைமுறைப்படுத்துமாறு ஆள்பதி மன்னிங்கும் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரி டிவோன் சயரும் முன்பு கூறியிருந்தனர். அப்படி இருந்தும் அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய இடர் இரண்டு, மூன்று வருடத்துக்குள் எப்படித்தான் ஏற்பட்டது, அந்த இடர்தான் என்ன?

அந்த மூன்று வருட காலத்திற்குள் இலங்கை அரசியலில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் தோன்றி வளர்ந்ததைத் தவிர வேறு அரசியல் முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் எதுவும் தோன்றியிருக்கவில்லை. எனவே கிளிபேட் இடர் எனக் கருதியது, யாழ்ப்பாணத்திலிருந்து தேசியத் தன்மையுடன் ஓர் அமைப்பு வளர்ந்து பிரித்தானிய ஆதிக்கத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பதுதான்.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் இனவாதத்தை வெற்றி கொண்டு இலங்கை முழுவதற்கும் தேசியப் போராட்டத்தை வளர்த்து விடும் என்று எண்ணி கிளிபேட் அஞ்சினாரா? அல்லது மாணவர் காங்கிரசின் நடவடிக்கைகள் பிற்காலத்தில் இலங்கை முழுவதையும் இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து விடும் என்று அஞ்சினாரா? இந்த இரண்டில் எதனைக் கிளிபேட் கருதினார்என்பதைத் தெளிவுற அடையாளம் காண்பது சற்றுக் கடினம்.

இந்தியாவுடன் இணைக்கும் வகையிலோ அல்லது இணையாமலோ இலங்கையர் அனைவரையும் தழுவிய வகையில் பிரித்தானியர் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டம் யாழ்ப்பாணத்தில் கருக் கொள்வதாக கிளிபேட் அஞ்சினார் என்று பெருமளவு கருத இடமுண்டு.

விசாரணைக் குழு அனுப்பப்பட வேண்டுமென்று கிளிபேட் 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேண்டிய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு 1927 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி டொனமூர் குழுவினர் இலங்கையில் கால் வைத்தனர். அன்றைய தினம் மகாத்மா காந்தியும் யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின் அழைப்பின் பேரில் கொழும்புக்கு வந்தார். காந்திக்கு கொழும்பில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. டொனமூர் குழுவை யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் உதாசீனம் செய்தது. காந்தியைப் பல சிங்களத் தலைவர்களும் சந்தித்தனர்.

காந்தி கொழும்பு, கண்டி, காலி போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்து உரைநிகழ்த்தினார். இறுதியாக 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். 1927 ஆம் ஆண்டு இலங்கையில் காந்தி அலை வீசியது. காந்தியின் கதர் இயக்கத்திற்கு இலங்கை முழுவதும் நிதி சேகரிக்கப்பட்டது. மொத்தமாகச் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாவில், யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட பதினெண்ணாயிரம் (18, 000) ரூபா தவிர ஏனையவை இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் சேகரிக்கப்பட்டன.

சிங்கள - தமிழ் தலைவர்கள் தம்மிடையிலான வேற்றுமைகளைக் கடந்து காந்தியை வரவேற்றனர். காந்தியின் இலங்கை விஜயமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளும் டொனமூர் குழுவினரின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பைக் கொடுத்தன.

ஏழு வாரங்கள் மட்டும் இலங்கையில் தங்கி நின்று விசாரணை நடத்திவிட்டு நாடு திரும்பிய டொனமூர் குழுவினர் புதிய அரசியலமைப்புத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தனர். சிங்களவரின் கையில் அதிக அரசியல் அதிகாரங்களை ஒப்படைக்கக்கூடிய வகையிலும், தமிழர் இலங்கை அரசியலில் எந்தவித அதிகாரமும் அற்றவர்களாக இருக்கக்கூடிய வகையிலும் அரசியல் அமைப்புத் திட்டத்தை டொனமூர் குழுவினர் உருவாக்கினர்.

வரலாற்று ரீதியாக தமிழின எதிர்ப்பு சிங்களத் தலைவர்களிடம் இருப்பதால், தமிழரை பாதிக்கக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையின் பொருட்டும் சிங்களத் தலைவர்கள் பிரித்தானியரைஅணைத்துக் கொள்ள முயற்சிப்பர் என்பது பிரித்தானியரால் புரியமுடியாத ஒன்றல்ல.

இந்தியாவுடன் இலங்கை இணைவதற்குரிய அறிகுறிகள் தென்பட்ட சூழலில் அதனை தடுக்கும் முகமாக சிங்களவரைத் தம்பக்கம் வென்றெடுத்தற் பொருட்டு தமிழருக்கு பாதகமானதும், சிங்களவருக்குச் சாதகமானதுமான அரசியற் திட்டத்தை டொனமூர் குழுவினர் உருவாக்கினர். இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சிங்களவர் இணைந்து கொள்வதற்குரிய தேவையை இல்லாது செய்வதற்காக சிங்களவருக்கு அதிக பங்கும் உரிமையும் வழங்கும் கொள்கைக்குப் பிரித்தானியர் வந்தனர். எல்லா வகையிலும் சிங்களவரைத் திருப்திப் படுத்துவது டொனமூர் குழுவின் உள்நோக்கமாய் இருந்திருக்க வேண்டும்.

டொனமூர் குழுவினரின் உள்நோக்கங்களை தெளிவாகப் பரிசீலனை செய்ய வேண்டும். ஆயினும் சுருக்கமாக இங்கு நோக்குதல் போதும்.

இலங்கையில் இருந்த இனவாரி பிரதிநிதித்துவத்தைப் பற்றி டொனமூர் குழுவினர் தமது அறிக்கையில் குறை கூறியுள்ளனர் அல்லது கண்டித்துள்ளனர்.
ஆனால் அந்த இனவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தியது யார்? இவர்கள் தானே?.

இனவாரி பிரதிநிதித்துவத்தை தாம் ஏற்படுத்தியமைக்காக ஒரு சமாளிப்புக் காரணம் கூறியுள்ளார் டொனமூர். அதாவது.

"பல்வேறு இனங்களும் சமயங்களும் உள்ள நாடுகளில் மக்களாட்சி நிலையங்களை வளர்த்தற் பொருட்டு தேர்தலின் போது பல பகுதியினரின் மோதலைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையினால் இனவாரிப் பிரதிநிதித்துவமுறை ஏற்படுத்தப்பட்டது. அது சமூகத்திலுள்ள பல்வேறு மக்களின்த்தாருக்கும் நற்பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய சட்டசபையை அமைதியுடன் அளித்து, மக்களிடையே ஒற்றுமையை வளர்க்குமென எதிர்பார்க்கப்பட்டது."

இது உண்மையா என்பதை இனவாரி கொள்கையுடைய இன்னொரு பிரித்தானியராகிய லெப்ரினன் கேர்ணல் கொக் என்பவரது கூற்றின் வாயிலாக நோக்குவோம்.

"பல்வேறு சமயங்கள், இனங்களுக்கிடையிலுள்ள வேற்றுமையை முழுவிசையுடன் ஆதரிப்பதே நமது முயற்சியாக இருக்கவேண்டுமேயன்றி, அவற்றை இணைப்பதாக இருக்கக்கூடாது. நாட்டை பிரித்தாள வேண்டும் என்பதே இந்திய (அப்போது பிரித்தானிய-இந்தியா) அரசின் கொள்கையாக இருக்க வேண்டும்".

தொடர்ச்சி ௯ம் பக்கம்....

# சர்வதேச வாசகர் கவிதைகள்

## இத்தாலியிலிருந்து
## புதுமைப் பெண்

இவளும்
எம்மைப் போலவே
உண்டு மகிழ்ந்து
கூடிக் குலாவி
வாழ்வை அனுபவிக்கப்
பிறந்தவள்
ஆனால்
பிறந்த மண்ணின்
சோகங்கள்
சொந்த மக்களின்
இழப்புகள்
இவளுக்குள் மட்டுந்தான்
பூகம்பமாய் வெடித்தது
இதோ
எழுந்து வருகின்றாள்
சுகங்களைத் துறந்து
சுதந்திரத்தை தேடுகின்றாள்
எதிரியின் உடலினை கிழித்திட
ஈட்டியதை எடுத்து விட்டாள் - இவளும்
ஈழம் வளரும்வரை ஓயவே மாட்டாள்



■ ஓவியம் - நவநீதன்
கவிதை - யாதவன் ■

## "ஈற்றில் வந்தோம் ஈழம் விட்டு இனிமைத் தமிழோ இருட்டின் வழியில்"

நேற்றுக் கூட நடந்த கதைகள்
 நிழலாய் நெஞ்சில் தெரியும் போதும்
வேற்று மனிதர் நம்முள் வந்து
 வேட்டை நாயாய் குதறும் போதும்
சோற்றுக் கலையும் சுயநலப் பேயாய்
 சுகந்தளைக்கும் செக்கு மாடாய்
ஈற்றில் வந்தோம் ஈழம் விட்டு
 இனிமைத் தமிழோ இருட்டின் வழியில்

கூற்றும் கண்டு குலைநடுங்கி
 குவலயம் எல்லாம் புகழ் பரப்பி
ஏற்றம் கண்டவர் எமது முன்னோர்
 எங்கே தமிழா எமது வீரம்
போற்றும் தமிழ்த் தாய் பொன்னுடலை தன்னை
 பொறுக்கிகள் வந்து நொறுக்கிடும்போது
சீற்றம் காட்டா செம்மறிக் கூட்டம்
 சோற்றில் வளர்ந்த வெறும் சதைப் பிண்டம்

■ கவிஞர் - சிவகுமாரன் ■

## அவுஸ்திரேலியாவிலிருந்து
## அபலையின் சபதம்

நானிருக்க உனக்கேன் கவலை
நாளெல்லாம் காத்திடுவேன்
என் கைகள் இரும்பெடி
என்றும் கைத்தாங்கலாய் அணைத்திடுவேன்
ஊரென்ன பேசும்
உறவாய் நானிருக்க
சிரித்திடு என் தங்கமே
சித்திரமாய் காட்சி தந்து
என்றெல்லாம் சொன்னாயே
என் ராசா
இன்று போய் விட்டாயே
இன்னலுக்குனை ஆளாக்கி
நாளெல்லாம் உழைத்தாயே என் ராசா
நலமாய் எனைக் காக்க
கொழும்புச் சீமை
கொடுங்கோன்மை செய்ததென்ன
வேலை முடித்து வந்த உன்னை
வேட்டியோடு இழுத்தெடுத்து
தலைதனில் எண்ணை ஊத்தி
தார்மீக நெருப்பெடுத்து
சுதந்திரம் உனக்கேன் என்ற காலி
சுதந்திரமாய் நெருப்பிட்டு
பிரித்தனரே பிரியாதிருக்க நினைத்த எம்மை
மிருகம் பெற்ற கொடுங்கோலர்
மிருகத்தை மிஞ்சினரே
என் செய்வேன் என் ராசா
கொன்றவனைப் பழி தீர்ப்பேன்
தீயிட்ட சண்டாளனை
தீர்த்திடத் துடிக்குதென் மனம்
ஆற்றாதலறுகிறது - உன்
ஆண்மையது என்னுள்ளே அடங்கியதால்
பொறுத்திடு என் ராசா
பொறுமையாய்ப் பழி தீர்த்திடுவேன்
புதல்வன் புறப்பட்டே வந்திடுவான்
சீக்கிரமாய் புலையர்தலைப் புதைத்திட

■ நந்தா ■

## இலண்டனிலிருந்து
## தாயகத்தில் அவையாவும் உண்டு.

தாயகமாய் தமிழ் ஈழமதில்
நிகழும் அநியாயங்கள் பல உண்டு
அதிலே நான் எழுதும் இச்சிலவும் உண்டு
ஊரெல்லாம் ஊடுருவி உதிரம்
பாய்ந்ததும் உண்டு
தாலி அறுந்ததும் உண்டு
மாதரின் தலையினிற் தவழ்ந்த
மல்லிகை வீழ்ந்ததும் உண்டு
குங்குமம் கலைந்ததும் உண்டு
கூறைச் சேலை வெண்ணிறம்
ஆனதும் அங்கு உண்டு
விதவைகள் வளர்ச்சி வீதத்திற்குள்
அடங்கா வரைபுகளும் அங்கு உண்டு
கை கால் இழந்து கனபேர்
நடைப் பிணமானதும் உண்டு
கன்னிப் பருவமதில் கற்பிழந்த
பலரும் அங்கு உண்டு
அங்கு தரப்படுத்தலும் உண்டு
வீடு தரையினிற் படுத்தலும் உண்டு
தமிழ் ஈழமதில் வாழும்
தவளைக்கும் அங்கு குண்டு உண்டு
இவை அறிந்தும் இங்கோ
மௌனம் உண்டு
அகதிக்கெங்கே அடைக்கலம் உண்டோ
அங்கெல்லாம் தமிழன் உண்டு
என்கின்ற பழி உடைக்க
தமிழ் என்ற மூன்றெழுத்தில் என்
மூச்சிருக்கும் என்று ஒவ்வோர்
தமிழ் மகனும் தடி எடுத்துக்
களம் சென்றால் உனக்கென்று
நாளை ஓர் நாடு உண்டு
அதற்கு தமிழ் ஈழமென்று
அழகான பெயரும் உண்டு.

■ சி. தவநாதன் ■

மரணம்



அது முடிவல்ல

## நோர்வேயிலிருந்து
## விடுதலை பசித்தவர்கள்

இந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே
அடக்கு முறைகளின் அடையாளங்களை.
கண்டு கொண்டவர்களே!

இன்றைய இரவுகளின் விடியலை
நாளைய பொழுதில் தேடிக்கொள்ள
இன்றே அணிவகுத்து விட்டீர்களா?

பூக்களை ஏந்த வேண்டிய
இந்த பிஞ்சுக் கரங்களினால்
துப்பாக்கியை பற்றிக் கொண்டீர்களே !


உங்களின் விழிகளில்
எதிர் காலத்தின் விளைச்சல்
விரிந்து கிடப்பதை
நீங்களே கண்டு கொண்டீர்களா?

கார்கால மழைகள்
கண்களில் வடிகையிலும்
நீர் தேடும் வேர்கள் அல்லவா நீங்கள்

விதைக்காமலேயே முளைத்த
விடுதலை வித்துக்களே
எதிர் காலத்தினுள் உங்கள் வேர்கள்
ஆழமாய் நுழையட்டும்.

வெளிச்சத்தை கற்கும் வயதில்
வெளிச்சம் தேடி புறப்பட்டவர்களே
விடியல் பொழுதொன்று
உங்கள் விழிகளில் தெரிகிறது
விரைந்து செல்லுங்கள்.....

■ வேலையூர், நவமகன் ■



## ஜேர்மனியிலிருந்து
## புலியாக நீ வேண்டுமே

செந்தணல் சுடுகாட்டில்
போட்டுன்னை சுட்டாலும்
சோராத மனம் வேண்டுமே - தமிழா
போராடும் குணம் வேண்டுமே
---செந்த

செங்கடல் அலைநடுவில்
சிக்கித் தவித்தாலும்
சோராத மனம் வேண்டுமே - தமிழா
போராடும் குணம் வேண்டுமே
----செந்த

சொந்த பந்தங்கள் வந்து
இதயத்தை பிழிந்தாலும்
சோராத மனம் வேண்டுமே - தமிழா
போராடும் குணம் வேண்டுமே
-----செந்த

பட்டங்கள் பதவி தந்து
பிடித்துனை இழுத்தாலும்
மாறாத மனம் வேண்டுமே - தமிழா
போராடும் குணம் வேண்டுமே
-----செந்த

தமிழனுக்கு தன்னாடு அமைவதென்றால் - தமிழா
போராடும் குணம் வேண்டுமே
புலியாக "நீ" வேண்டுமே
-----செந்த

■ தா. சிவநாதன் ■

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்


கடலிலே காவியம் படைப்போம்

SEA TIGERS
OF LIBERATION TIGERS

# கடற்புலிகளின்.

புவியியல் ரீதியாக தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே, கடற்பரப்பிலும் நாம் பலம்பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தை தகர்த்து, எமது கடலில் நாம் பலம்பெறும் போது தான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப்படையையும் விரட்டியடிக்கமுடியும்.

■ தலைவர் பிரபாகரன் ■




## புதிய பரிமாணம்

1984 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ கடற்காவலை மேற்கொண்டு வந்த கடற் புலி அணியினர் 10-07-90ல் வல்வைக் கடலில் வைத்து தங்களது பாரிய தாக்குதலை நிகழ்த்தினர். கடற் புலிகளான மேஜர் காந்த ரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் வெடிமருந்து நிரப்பிய படகில் சென்று சிறிலங்கா கடற்படையின் போர்க் கப்பலை தகர்த்தனர். 4-05-91ல் சிறிலங்கா கடற்படையின் கட்டளைக் கப்பலொன்று கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரால் இதேபோன்று தகர்த்தப்பட்டது.

## நவீனமயப்

கடற்புலிகளின் தாக்குத் திறனை மேலும் அதிகரிப்பதற்காக த
நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. ஐம்பது கலிபர் கனரக துப்பாக்கி
பொருத்தப்பட்ட படகுகள் இவ் அணியில் இயங்கத் தொடங்கியு
அவசியம்பற்றி மக்களுக்கு எடுத்துரைத்ததுடன் புதிய துப்பாக்கி
வெளிப்படுத்தினார்.

# புதிய பரிமாணம்!




### ...டுத்தல்

...பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை அணி... ...கள், அதிவேகமாகச் செல்லக்கூடிய இயந்திரங்கள் என்பன ...ரான. கப்டன் தூசை அவர்கள் இவ் நவீன ஆயுதங்களின் ...னை பரீட்சார்த்தமாக இயக்கி, படகுகளின் தாக்குதிறனை

### கொலின் கண்ணிவெடி

இவ்விதமாக, கடலில் கடற்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக கடல்வழியாக கரையிறங்கி தரை நகர்வு செய்ய முடியாத நிலை சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்டது. கடலில் கடற்புலிகள் கண்ணிவெடிகளை விதைத்து வைத்ததன் காரணமாகவே சிறீலங்கா கடற்படையின் நடமாட்ட வேகம் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கப்டன் கொலின்ஸ் இன் ஞாபகார்த்தமாக நீரின்மேல் மிதந்து, வெடிக்கும் தாக்குத்திறன் கூடிய (கொலின்) கண்ணிவெடிகள் கடற்புலிகளால் தயாரிக்கப்பட்டன. இத்தகைய வளர்ச்சிகளால் சிறீலங்கா கடற்படை கடலிலும் மிகக் கடுமையான சவால்களை சந்திக்க பின்வாங்கி வருவது நடைமுறை உண்மை.




போராட்டம். . . . இந்தச் சொல்லுக்குள்தான் எத்தனை விதமான உணர்ச்சி அலைகள் அடங்கி இருக்கின்றன.

குடும்பம் என்ற சிறிய பரப்புக்குள் சில மனிதர்கள், சில உணர்வுகளென்று வாழ்ந்த நாம் 'விடுதலை இயக்கம்' என்ற விரிந்த பரப்புக்குள் வந்ததால் ,எத்தனை விதமான உள்ளங்களை ,சந்தோசங்களை, பிரிவுத்துயரங்களை வாழ்வின் உண்மைகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது போராட்ட வாழ்வில் உன்னதமான உள்ளங்களோடு பழகும்போது சந்தோசப்படும் நாங்கள், பிரிவு என்று வருகின்றபோது அதிகமாகத் தாக்கப்படுவதென்னவோ உண்மைதான். கப்டன் அக்கினோவின் உள்ளம் கூட அந்த உன்னதமான உள்ளங்களில் ஒன்றுதான்.

மிகவும் வசதியான குடும்பம். வாழ்வில் பொருளாதாரக் கஸ்டங்களையோ ,துன்பங்களையோ கண்டிராத செல்வந்தமான குடும்பச்சூழலின் கடைசிப்பிள்ளைதான் அக்கினோ.

"நாங்கள் செல்லமாக வளந்தனாங்கள், போராட்ட கஸ்டங்களை எங்களால் தாங்க ஏலாது" என்று சொல்கின்றவர்களுக்கு அக்கினோ வாழ்ந்து காட்டி இருக்கின்றாள். விடுதலை உணர்வுக்கு முன்னால் வேறெந்தப் புற உலக உணர்வுகளும் தாக்குப்பிடிக்க முடியாது என நிருபித்திருக்கின்றாள். ஏனென்றால் ?

அக்கினோவும் ஒரு செல்லப்பிள்ளைதான். பாடசாலை நாட்களில் அக்கினோவைக் கண்டவர்கள், பழகியவர்கள் அக்கினோவைப் பற்றிக்கூறும் தகவல்கள்.
"இவள் எப்படி இந்த வாழ்வை ஏற்றுக்கொண்டாள்?" என ஆச்சரியப்படவைக்கும்.

அக்கினோவின் எடுப்பான தோற்றம் அவளைப் பற்றிய பார்வையில் ஒரு தவறான கணிப்பைக் கொடுத்திருக்கலாம். ஏன்? நாம் கூட.
"இவள் எப்படி எல்லாப் போராளிகளோடும் ஏற்றத் தாழ்வின்றிப் பழகப் போகிறாள்?" என நினைத்ததுண்டு. ஆனால் பழகிய போது புரிந்தது. அவள் இதயத்தில் ஏற்றத் தாழ்வுக்கு இடமில்லை என்று.

அக்கினோவின் அப்பா தமிழீழத்தின் நேதாஜி மாமனிதர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் எங்கள் தலைவனின் கைக்கு இறுக்கமாக வலுவூட்டியவர்.

உண்மைதான் இப்படி ஒரு தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி எங்கள் மண்ணை நேசிக்காமல் இருக்கமுடியும்? அக்கினோவின் அப்பா மட்டுமல்ல அவளது அக்கா கூட எங்கள் அமைப்பில்தான் இருக்கின்றாள்.

தமிழீழம் தனது தலை சிறந்த பெண் போராளிகளில் ஒருத்தியை இழந்து விட்டது. நாங்கள் ஓர் உயர்ந்த, உன்னதமான தோழியை இழந்துவிட்டோம். அந்தத் தோழியின் வீடோ அமைதியைப் பெற்றெடுத்து விட்டது. அந்த வீட்டின் படிகள் அனேகமான நாட்களில் சிங்கள, இந்திய சப்பாத்துக் கால்களையும் ,துப்பாக்கிக் காவல்களையுமே சந்தித்திருக்கின்றன.

அப்பாவின் தலைமறைவு வாழ்க்கைக் காலத்திலும், அப்பாவின் நிரந்தர மறைவின் பின்னான வாழ்க்கைக் காலத்திலும், அந்தத் துன்ப நிகழ்வுகளின் தாக்கம் அம்மாவை அதிகம் தாக்காது இருப்பதற்காக தனது கலகலப்பையே தாயின் கவசமாக்கினாள் அக்கினோ.

இன்று எல்லாத் துயரங்களைமே அம்மா தனியாகச் சுமந்துகொண்டிருக்கிறுள் .
அக்கினோ எம்மோடு இருந்தபோது ஒருநாள்.

'அப்பாவின்ரை படத்துக்கு இடதுபக்கம் என்ரை படமும் வலது பக்கம் அக்காவின்றை படமும் வைக்க இடம் விடுங்கோ அம்மா'என்று தாயிடம் சொன்னதாகச் சொன்னாள்.

எங்களுடைய ஒவ்வொரு போராளிகளும் ஒன்றை ஆழமாக உணர்ந்திருக்கிறுர்கள்.

என்றோ ஒருநாள் அது இன்றோ.... நாளையோ.... அல்லது இன்னும் சில காலங்களில் பின்னோ. இந்த மண்ணிற்கான மரணத்தை நாம் சந்திப்போம் என்ற உண்மை தான் அது. அதனால் தான் என்னவோ , சண்டைக்கு போக வேண்டும் என்று எல்லோரும் சண்டை பிடித்துக்கொள்கிறார்கள்.

அப்படித்தான் அக்கினோவும்.

சண்டை என்றதும் அவள் சந்தோசப்படுகின்ற கணங்களைத் தான் பார்த்திருக்கின்றோம்.

விடுதலைபுலிகள் எல்லோருமே கூறுகின்ற, 'நல்லா அடிபட வேணும். நிறைய அயுதங்கள் எடுக்க வேணும் அதுக்குப்பிறகுதான் சாகவேணும் என்பதைத் தான் அக்கினோவும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

கட்டுவன் சந்தி இராணுவ மினி முகாம் முன்னால் இவள் காவல் நின்ற காலம்....இவள். தான் குழுவின் இரண்டாவது பொறுப்பாளர் பலாலி இராணுவத்தினர் அடிக்கடி வெளியேற முற்படும் முக்கிய பாதைகளில் கட்டுவன் சந்தியும் ஒன்று. இந்த மினமுகாமிற்கு முன்னால் காவல் நிற்கும் எங்கள் குழுவில் அடிக்கடி உறுப்பினர்களை மாற்ற வேண்டிவரும். ஏனென்றால் அடிக்கடி தாக்குதல் நடக்கும்போதோ, அல்லது வெளியேறும்போதோ எம்மில் பல போராளிகள் வீழ்ந்திருப்பார்கள். அல்லது காயப்பட்டிருப்பார்கள்.

அக்கினோ வருவதற்கு ஐந்து நாட்கள் முதல்தான் கட்டுவன் நிலையிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் மோதியதில் சுந்தரியுடன் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர். அக்கினோ சென்ற நான்கு நாட்களுக்குள் திரும்பவும் அந்த இடத்தில் இராணுவம் வெளியேறியது. கப்டன் சுந்தரி வீரச்சாவடைந்த தாக்குதலில் ஏற்பட்ட எமது தரப்பு இழப்பு அவளை உற்சாகப்படுத்தியிருந்தது போலும், அனால் அன்றைய சண்டை முடிவோ வேறு மாதிரி இருந்தது. அன்று எதிரிகளை பின்வாங்கச் செய்ததில் அக்கினோவின் துப்பாக்கிக்கு அதிக பங்குண்டு.

அக்கினோவுக்கு கணிசமான ஆங்கில அறிவுண்டு. அத்தோடு எந்தத் துறையிலும் விடயங்களை கிரகிக்கும் ஆற்றலுண்டு. தான் பெற்றிருக்கும் அறிவினை சக போராளிக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு நிறையவே இருந்தது. அதனால்தான் பயிற்சி முகாமில் கூட கடும் பயிற்சிகளுக்கு நடுவேயும் அவள் இரவில் அவர்களுக்காக ஒரு மணி நேரம் ஒதுக்கி வைத்திருந்தாள்.

வவுனியாவில் இராணுவம் வெளியே வந்த காலத்தில் காட்டின் ஒரு பக்கத்தில் இவளின் குழுவும் நின்றது. திசை காட்டியை (கொம்பாஸ்) எவ்வாறு படிக்க வேண்டும், என்று எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். எந்த நேரமும் வந்து விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் செல்களுக்கும் நடுவே ஒரு இடத்தைக் குறி வைத்து திசை காட்டி மூலம் அந்த இடத்துக்குப் போய் வந்து, பின்னர் தனது குழுவினருக்கும் அவ்வாறே காட்டிக் கொடுத்து, போய் வரப் பழக்கினாள்.



கப்டன்
அக்கினோ

காட்டிலே போர் நடக்கும் போது காடு மாற நேரிட்டால் அதுவே போராளிகளின் இழப்புக்கு மிகப் பெரிய காரணமாகிவிடும். போராளிகளின் இழப்பு ஒரு புறமும், இராணுவ முன்னேற்றம் மறுபுறமுமாகப் பாதகமான தாக்கங்களுக்கு, தான் காரணமாயிருக்கக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

வவுனியாவில் இருந்து வந்தவுடன் ஆனையிறவுச் சண்டை ஆரம்பித்து விட்டது. வெட்ட வெளிகளில் இராணுவத்தினரை இறக்க விடாது காவல் செய்யும் பகுதியில் அவள் கடமையிலீடுபட்டிருந்தாள்.

அடுத்தடுத்துச் சண்டைகள். ஓய்வெடுக்க எமது போராளிகளுக்கு நேரமில்லை. குண்டுச் சத்தங்களுக்கும் குருதி வெள்ளத்துக்கும் நடுவே எங்கே நாங்கள் ஓய்வைத் தேடுவது? எப்படி ஓய்வெடுப்பது? முப் படைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்தபடி முன்னேற வேண்டியவர்களாயிற்றே நாங்கள். களைப்பும் அலுப்பும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவையே எங்களைக் கட்டுப் படுத்திவிட முடியுமா? நித்திரை என்பது எங்களை விட்டு நிரந்தரமாகவே வெளியேறிவிட்டால் என்னவென்று எண்ணுபவர்கள் நாங்கள். கண்ணுக்குள் நித்திரை சுழன்று கொண்டிருக்கும். அரைக் கண்ணில் ஆடி ஆடித்தான் நடந்தாலும் கண் மூடிவிட முடியுமா? கண் மூடக் கண் மூட எம் தேசம் காணாமல் போய் விடுமல்லவா? அதனால் தான்....

ஓய்வு இல்லாத தேசத்தின் எந்த எல்லையில் சண்டை நடந்தாலும் அங்கு எட்டி நடந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனையிறவுச் சண்டையின் வேகம் குறைய மணலாற்றில் சண்டை ஆரம்பித்துவிட்டது. அக்கினோவின் குழுவும் மணலாற்றிற்கு விரைகிறது. மணலாறு எங்கள் தேசத்தின் மையப் புள்ளி. மணலாற்றுக் காடு தான் எங்கள் தாய் வீடு. பிராந்துகளிடமிருந்து செட்டைக்குள்ளாய் எமை வளர்த்த தாய்க் கோழி. பிராந்திய வல்லரசு ஒன்றை எமது பிரதேசத்திலிருந்து பின்வாங்கச் செய்யுமளவிற்கு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திய இடம். அங்குலம் அங்குலமாக அந்நிய இராணுவம் கால் பதித்து தேடியபோதும் தமிழீழத்தின் தலைவரை தக்க வைத்துக் காத்த பெருமை மணலாற்றிற்கு மட்டும் தான் உண்டு. குண்டுகளைத் தாங்கித் தாங்கியே மணலாற்றுக் காடு வலிமை பெற்றுவிட்டது. உரிமைப் போர் அல்லவா.

உக்கிரமான சண்டைதான். காடு பற்றி எரிகின்றது. எங்கும் ஒரே புகை மண்டலம் தான். மணலாறு மண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. முதல் நாள் சண்டையின் போது அக்கினோ நின்ற பக்கமாக இராணுவம் முன்னேறியது. அங்குல நிலம் கூட எதிரியை அசையவிடாத சண்டை. அக்கினோவின் குழுவில் இரண்டு போராளிகள் விழுந்து விட்டார்கள். ஒரு உடல் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் அடுத்தது....எங்களுக்கும் அவர்களுக்குமிடையில்... அவர்களுக்கு மிக நெருக்கமாக...

வீழ்ந்த போராளிகளின் உடல்களை மீட்பதற்காகவே புதிய போராளிகள் விழுகின்ற வரலாறுதானே எம்வரலாறு. போர் நிலமை உடனுக்குடன் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். அக்கினோ அறிவிக்கின்றாள்.

"உடலை எடுப்பது கஸ்டம் தான் அக்கா. ஆனால் எப்படியும் நான் எடுப்பேன்"

தலை நிமிர்த்த முடியாதளவுக்கு தரையோடு தரையாக வரும் துப்பாக்கி ரூடுகளுக்கு அடியில் ஊர்ந்து முன்னேறினாள். எப்படியோ உடலை எடுத்துவிடுகிறாள். அந்த இடத்தில் அனைவருக்கும் ஒரு உறுதி பிறக்கிறது. கடைசிவரைக்கும் இச் சண்டையில் எந்த உடலும் எம்மால் கைவிடப்படக் கூடாது என்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தோம்.

ஒத்துழைக்க மறுத்த காட்டுச் சூழலாலும், நித்திரையோ குளிப்போ இல்லாத கடமையின் இறுக்கத்தாலும் அநேகமான போராளிகளுக்கு காய்ச்சல் வந்துவிடுகின்றது. அக்கினோவுக்கும் காய்ச்சல் தான்.

காய்ச்சலுடன்தான் மணலாற்றுப் பகுதியில் மகளிர் பிரிவுக்கான மருந்து, உணவு, ரவை விநியோகங்களைப் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தாள்.

இராணுவத்தினர் ஒரு பக்கமாக முன்னேற முயற்சிக்க, அக்கினோ அந்த இடத்துக்கு விரைந்து, போராளிகளுக்கு நிலைமையை விளங்கிக் கொண்டிருக்கும்போது, அவளது அடுத்த குழு நின்ற பக்கமாக விமானம் பதிந்து எழுந்தது. நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அக்கினோ அந்த இடத்திற்கு ஓடினாள்.

இன்னொரு தடவை அந்த விமானம் பதிந்து எழுந்தது.

அக்கினோவின் தசைத்துணுக்குகளும், குருதித்துளிகளும் மணலாற்று மரங்களில் தெறித்தன. அக்கினோ போன்ற நூற்றுக்கணக்கானோரின் இறுதிக் கணங்களை அறிந்து கொண்ட அந்த மணலாற்றுக் காடு இன்று மீட்கப்பட்டுவிட்டது. இந்தியப் போரின் பின் இது இரண்டாவது சண்டை, முன்னையை விட இப்போது உறுதியாய் நிற்கும். மணலாற்றுக் காடு இனி வரும் காலங்களில் இன்னும் உறுதியாய் எழுந்து நிற்கும். ஏனென்றால் அதற்குத் தெரியும் தன்னுள் உறங்கும் எங்கள் நண்பர்களைப் பற்றி. ■

## பிரித்தானியரின்...

என்று இந்தியாவைப் பிரித்தாண்ட ஆங்கிலேயன் கூறினான். இந்திய விவகாரங்களுக்கான பிரித்தானிய நிபுணன் சேர். ஜோன் இஸ்டிராக்கி இன வேறுபாடு பற்றி கூறுகையில்,

"பகைமை கொண்ட இந்த மதங்கள் அடுத்தடுத்து இருப்பது இந்தியாவில் நம் (பிரித்தானியரின்) அரசியலின் நிலைக்கு ஒரு வலுவான அம்சம் என்பது தெளிவான உண்மை".

எனவே "இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் " நன்நோக்கம் தம்மிடமிருந்ததாக டொனமூர் கூறுவதை யார்தான் நம்ப முடியும். டொனமூர் குழுவினரின் உள்நோக்கங்களை மேலும் துலக்க இது உதவும்.

விதிவிலக்காக ஏ. ஈ. குணசிங்காவை தவிர இலங்கையில் வேறு யாரும் சர்வசன வாக்குரிமையைக் கோரவில்லை. சிங்களவர்களால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் கூட வரையறைக்குட்பட்ட முறையிலான வாக்குரிமையையே டொனமூர் குழுவினரிடம் கோரியது. அப்படியிருந்தும் வயது வந்த ஆண் பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமையை டொனமூர் குழுவினர் வழங்கினர். கேட்கும் உரிமையைக் கொடுக்காதவர்கள் கேளாத ஓர் உரிமையை ஏன் கொடுத்தார்கள்? சிங்களவரை அதிகம் திருப்திப்படுத்தவும் தமிழருக்கு எதிரான அதிக அரசியல் அதிகாரம் அவர்களின் கையில் குவியும் என்பதனாலும் தான்.

"முழு யாழ்ப்பாணத்தவர்களும், இந்தியர்களும், முஸ்லிம்களும், சில பறங்கியர்களும் டொனமூரின் அரசியல் சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். சிங்களவர்களின் நாடு சிங்களவர்களால் ஆளப்படுகின்றது என்று லண்டன் ரைம்ஸ் பத்திரிகை கூறுகின்றது. இப்போது ஒரு சந்தர்ப்பம் எம்மை நாடி வந்துள்ளது. ஏன் நாம் இதனை ஏற்கக்கூடாது". என்று சிங்கள மக்களின் அன்றைய தலைவராக இருந்த பரன் ஜெயதிலகா கம்பகாவில் 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். சிங்களத் தலைவர்கள் தமக்குச் சாதகமானது என்றவுடன் அரசியல் திட்டத்தைக் கவ்விப் பிடிக்கும் நிலையையும் இதில் காணமுடிகிறது.

மிகுதி அடுத்த இதழில்,...

## கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றனர்.

மூதூர் ஈச்சிலம்பத்தையில் தேடுதல் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் வெருகலையைச் சேர்ந்த கணேஸ், சிவகரன் , மூதூரைச் சேர்ந்த தி. கிருபன், மூதூர் முத்துச்சேனையைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை என்னும் மூவரையும் துண்டு துண்டாக வெட்டிக் கொன்றனர். இதில் கணபதிப்பிள்ளை அவர்கள் மூதூர் முத்துச்சேனை பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் எனத் தெரியவந்துள்ளது.

# தமிழீழப் பெண் போராளிகள்

## ஒரு கண்ணோட்டம்

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் பெண்களும் நேரடியாகப் பங்கு கொண்டு அளப்பரிய பணிகளை ஆற்றிவருகின்றார்கள் என்பது உலகறிந்த ஒரு விடயமாகும்.

இன்று தமிழீழப் பெண்களைப் பொறுத்தளவிலோ இது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சியாகும். சீருடை அணிந்தவாறு தமது துப்பாக்கிகளை தோளில் சுமந்தபடி மிதிவண்டிகளில் செல்லும் பெண் போராளிகளை மக்கள் அன்றாடம் கண்டு வருகின்றார்கள்.

ஆனாலும், பெண்கள் ஆயுதம் தாங்கிக் களத்தில் நின்று போர் புரிவதை ஏற்றுக் கொள்ளாத விரும்பாத மனப்பான்மையைக் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ஆயுதமேந்திய பெண்கள் போர் புரிவது தமிழ்ப் பண்பாட்டிற்கு முரணானது எனவும் எம்மில் சிலர் வாதிட முன்வருகின்றார்கள். எது எப்படி இருந்த பொழுதிலும், தமிழ் யுவதிகள் ஆயுதப் போரில் நேரடியாக இணைந்து கொண்டது, தமழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலிமை சேர்த்திருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

போராளிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதனால் போராட்டம் கண்ட கணிசமான வெற்றிகளும் இதை நிரூபிக்கின்றன. விடுதலைப் போராட்டங்களில் பெண்களும் பங்கு கொண்டு ஆயுதமேந்திப் போராடுவது என்பது உலகில் இன்று பரவலாக நடைபெற்று வருகின்ற போதிலும் கூட இது ஒரு இயற்கைக்கு விரோதமான செயல் எனப் பார்ப்பது இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இன்று, உலகம் பூராகவும் பெண்கள் சாதித்துக் கொண்டிருக்கும் பல்வேறு சாதனைகள் மத்தியிலும் பெண்களை தரங்குறைத்துப் பேசுகின்ற கருத்துலகம் இருக்கத்தான் செய்கின்றது. அக்கருத்துலகம் பெண்களைக் குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் வைத்தே பார்க்க விரும்புகின்றது. பிள்ளை வளர்ப்பு, குடும்பப் பராமரிப்பு போன்ற வீட்டு வேலைகளை மட்டும்தான் பெண்களுக்கு இயற்கை கொடுத்த வேலைகள் என அந்தக் கருத்துலகம் பறைசாற்றுகின்றது.



இப்பிற்போக்குத்தனமான ஆண் ஆதிக்கம் கொண்ட இக்கருத்துலகம் மக்களை பற்றிப் பிடித்தே வைத்திருக்கின்றது.

பெண்கள் ஆயுதமேந்தித் தங்களையோ அல்லது தங்களது இனத்தையோ பாதுகாக்கப் போராடும் போது குறித்த அந்த நாட்டில் ஏதோ பாரதூரமான விடயங்கள் இருக்கின்றன என்று உலகம் முடிவெடுக்கின்றது. இப்படித்தான் தமிழீழத்தையும் உலகம் பார்க்கின்றது.

ஆசிய நாடுகளிலுள்ள சமூக அமைப்புக்களும்-பண்பாடுகளும் பெண் அடக்குமுறை நிரம்பப் பெற்றவையாகவே காணப்படுகின்றன. தமிழீழமும் இதற்கு விதிவிலக்கல்ல. பெண் ஒடுக்குமுறையை நிலைப்படுத்தும் சித்தார்தங்களும், சம்பிரதாயங்களும், பண்பாடுகளும் சமூக அமைப்புக்களும் பெண்களைக் காலம் காலமாக ஒடுக்கி வருகின்றன.

ஆனால் சமூக அதிக்கம் பெற்ற இவ் ஒடுக்குமுறைக் கருத்துக்களை உடைத்தெறிந்தபடி பெண்கள் ஆயுதமேந்தி போராட முனைகின்ற தன்மை குறித்த அத்தேசம் சந்திக்கும் அடக்குமுறைகளின் கொடூரத்தை வெளிப்படுத்துகின்றது.

**ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் ஆயுதமேந்தி கரந்தடி போர் முனைகளில் ஈடுபடுவது உலகில் பரவலாக நடைபெறுகின்றன. ஆனால் தமிழ்ப் பெண்கள் வெறுமனே கரந்தடி முறைப் போர்களில் மட்டுமல்ல கனரக ஆயுதங்கள் சகிதம் நேருக்கு நேர் மோதும் மரபு வழிப் போர் முறைகளிலும் நேரடியாகப் பங்கு கொண்டு சாதனை படைத்து வருகின்றார்கள் என்பது உலகில் எங்குமே நடைபெறாத விடயம்.**

இந்த வகையில் த. வி. போராட்டத்தில் பெண்களின் நேரடிப் பங்களிப்பானது தமிழீழ மக்கள் சந்திக்கும் தேசிய ஒடுக்கு முறைகளை உலகிற்கு துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது. அதே சமயம் ஆயுதப் போரில் தமிழ்ப் பெண்கள் நிகழ்த்திவரும் சாதனைகள் உலக பெண் சமூகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் ஆயுதமேந்தி கரந்தடிப்போர் முறைகளில் ஈடுபடுவது உலகில் பரவலாக நடைபெறுகின்றன. ஆனாலும் தமிழ்ப் பெண்கள் வெறுமனே கரந்தடி முறைப்போர்களில் மட்டுமல்ல கனரக ஆயுதங்கள் சகிதம் நேருக்கு நேர் மோதும் மரபுவழிப் போர்முறைகளிலும் நேரடியாகப் பங்கு கொண்டு சாதனை படைத்து வருகின்றார்கள் என்பது உலகில் எங்குமே நடைபெறாத விடயம்.

பெண் உலகில் நடைபெற்று வரும் இப் பூகம்பமானது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இராணுவத்திலுள்ள பெண்களுக்குப் பாரிய நம்பிக்கையையும், புத்தெழுச்சியையும் கொடுத்துள்ளது. குறித்த இந்த நாடுகளில் இராணுவத்தில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டு போர் முனைகளுக்கு இவர்கள் அனுப்பப்பட்டாலும் கூட நேரடிச் சண்டைகளில் இவர்கள் ஈடுபடுவதில்லை. மருத்துவம், விநியோகம், தொலைதொடர்பு போன்ற பின்கள வேலைகளிலேயே பெண் இராணுவம் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாடு போர் நெருக்கடிக்குள்ளாகும் போது அப் போர்ச் சூழலில் இருந்து நாட்டைப் பாதுகாக்க பணி புரியும் பெண்களது பங்கை மறுக்காது விட்டாலும் கூட இந்த இராணுவத்திலுள்ள ஆண் மேலாத்திக்கமும், சமூகத்திலுள்ள பழமைவாத எண்ணங்களும் பெண்கள் நேரடியாகப் போர் புரிவதைத் தடுக்கின்றன.

### அடேல் ஆன்

இது பெண்கள் போருக்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்தையே பிரதிபலிப்பதாக உள்ளது. ஆனால் பெண்களாலும் திறமையாகப் போர் புரிய முடியும் என்ற உண்மையை நிரூபித்துக் காட்டுவதில் தமிழீழப் பெண்கள் உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள்.

அபார போர்த்திறன், சாவுக்கு அஞ்சாத துணிவு, எதையும் எதிர் கொள்ளும் மனவுறுதி அகியவற்றில் தமிழீழப் பெண் போராளிகள் சிறந்து விளங்குகின்றார்கள் என்ற புகழ்மாலை எமது எதிரியான சிங்கள இராணுவத்திடமிருந்தே வந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

பெண்கள் ஆயுதமேந்திப் போரிடுவது எமது பண்பாட்டிற்கு விரோதமானது என சிலர் அங்கலாய்க்கின்றார்கள். இது ஒரு பிற்போக்குத்தனமான கருத்தாகும். எமது இலக்கிய வரலாறும் பெண்களை, குழந்தைகளை பெற்று வளர்க்கும் ஒரு அன்பான தாயாகவும் ஆண்களுக்கு



வீரத்தை ஊட்டி அவர்களைப் போருக்கு அனுப்பி விட்டு பெண்களை வீட்டிற்குள் முடக்குவதைத்தான் கூறியிருக்கின்றது. அதைத்தான் பெண்மை என்று போற்றியிருக்கின்றது.

இதன் காரணமாக இது தான் எங்கள் பண்பாடு மரபு என்றும் இதைத்தான் நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணப்பாடும் எமது மக்களில் கணிசமானவர்களிடம் உண்டு. ஆனால், தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காப் போராடவும், தனது இனம் அடக்குமுறைக்குள்ளாக்கப்படும் போது அதற்கெதிராகப் போராடவும் ஆண்களைப் போன்று பெண்களுக்கும் உரிமை உண்டு. தங்களது சொந்த வாழ்வை எப்படி அமைத்துக் கொள்வது எனத் தீர்மானிக்கும் உரிமையும் பெண்களுக்கு உண்டு. அத்துடன் தான் பிறந்த நாட்டிற்கான தேசாபிமான உணர்வுடன் பணிபுரியப் புறப்படும் ஒரு பெண்ணை தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

இன்னும் சொல்லப் போனால் இப்பெண் உரிமையைத் தடை செய்யாதிருப்பதுடன் நாம் வாழும் நாட்டிற்காக எமது சமூதாயத்தின் முன்னேற்றத்திற்காக பெண்களும் கட்டாயம் பங்கெடுக்க வேண்டும்• பெண்களை ஊக்குவிக்கவும் வேண்டும்.

இதே வேளையில் த. வி. போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பைப் பற்றி இன்னுமொரு கருத்தையும் இங்கு பார்ப்பது நல்லது. தமிழீழ மண்ணை சிங்களப் படையணிகளிடமிருந்து மீட்பதற்காக மட்டும்தான் தமிழ்ப் பெண்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. பல்வேறு விதமான சமூக ஒடுக்கு முறை வடிவங்களிலிருந்து தமிழீழப் பெண்களை மீட்கவும் போராடுகிறார்கள்.

இன ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ தமிழீழ சமூகத்தில் மிக மோசமான அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் பகுதியினர் யார் என்றால் அது பெண்கள்தான். தமிழ் பெண்கள் ஆண் ஆதிக்கத்தால் அடக்கப்படுகின்றார்கள். பேச்சுத் திருமணம், சீதனம் என்ற போர்வையில் பெண்கள் இழிமைப்படுத்தப்படுகின்றார்கள். ஏமாற்றப்படுகின்றார்கள். கையாலாகாத பொறுப்பற்ற கணவன்மார்களினால் கைவிடப்படுகின்றார்கள். வேலைகளிலும் அதற்குரிய சம்பளங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றார்கள். மருச்சித்தார்த்தங்களினாலும், மரபு வழிச் சம்பிரதாயங்களினாலும், பண்பாட்டுக் கோலங்கள் என்ற போர்வையிலும் தமிழ்ப் பெண்கள் அடக்கப்படுகின்றார்கள். அத்துடன் எதிரி இராணுவத்தால் பாலியல் வன்முறை மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

எமது விடுதலைப் போராட்டத்தின் முக்கிய அரசியல் நோக்கங்களில் ஒன்று தமிழீழப் பெண்களின் மேப்பாட்டுக்காக உழைப்பதும், அவர்களது நலன்களை மீட்டெடுத்து பாதுகாப்பதும்தான். இந்த வகையில் தமிழீழப் பெண்களின் எதிர்கால நல்வாழ்விற்காக இந்த இளம் பெண் போராளிகள் தங்களது உயிர்களை அர்ப்பணித்து இவ் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டபடியுள்ளனர். இவர்களுடைய போராட்ட பங்களிப்பானது ஒரு புதிய-புரட்சிகரமான வடிவத்தை தமிழீழப் பெண் சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

காலங்காலமாக பெண்கள் தொடர்பாக இருந்து வந்த இழிமைத்தனமான பார்வைகளை-த. வி. போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழீழ இளம் பெண்களின் இராணுவ அரசியல் செயற்பாடுகள் மாற்றியமைத்துள்ளன.

இப்புரட்சிகர மாற்றங்களையும் வீர வரலாறுகளையும் ஒரு எழுச்சிக் காவியமாக இவ்விளம் பெண் போராளிகள் படைத்து அதை எதிர்கால சந்ததிக்கு வழங்கியுள்ளார்கள். வீரம் செறிந்த தியாகங்கள் நிறைந்த நாட்டுப் பற்றை வெளிப்படுத்தும் இவ் உண்மைக் கதைகள் எதிர்கால சந்ததிகளாலும் போற்றப்பட்டு அதை நமது வழிகாட்டிகளாக வும் எடுத்துச் செல்வார்கள்.

இவ் வீர காவியங்கள் தமிழீழ வரலாற்றின் ஏடுகளிலிருந்து மறைந்து போகாது. அது காலங்காலமாகவே இருந்து தமிழ் மக்களின் வரலாற்றை வளம் படுத்திக் கொண்டேயிருக்கும். இத்தகைய முன்னுதாரணங்கள் மூலம் தமிழீழ இளம் பெண்கள் உலகம் முழுவதும் வாழும் புரட்சிகரப் பெண்களை எழுச்சியூட்டியுள்ளனர்.

அத்துடன் எல்லா திறமைகளிலும், பெண்கள் ஆண்களுக்குச் சளைத்தவர்களல்ல என்ற தன்னம்பிக்கையை உலகிற்கு குறிப்பாக பெண் சமூதாயத்திற்கு ஊட்டியுள்ளனர். இதன் காரணமாக, பெண்கள் தொடர்பாக · உலகம் முழுவதும் இருந்து வரும் பிற்போக்குத்தனமான பார்வைகளை களைந்தெறிய தமிழீழ இளம் பெண் போராளிகள் தாம் முன்நின்று பங்களித்துள்ளனர் என்பதை மறைக்க முடியாது.

இவ்விதம் செய்வதன் மூலம் பெண்கள் சமத்துவமாக பார்க்கப் பட வேண்டும். அதே போன்று

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# அழிவின் கைகள்

முற்றத்திலிருந்த மரக்குற்றியின் மேல் முத்தன் அசைவற்று இருந்தான். அவன் விழிகள் ஆகாயவெளியின் எல்லையில் எதையோ வெறுப்புடன் தேடிக் கொண்டிருந்தன.

'இன்னிக்கு என்ன செய்யிறது' அவனது இதயம் தவித்தது. குடிசையின் இறந்துயோன முகட்டு ஓலைகளை காற்று அசைத்து துன்பப்படுத்தியது. அந்தக் குடிசைக்கு உள்ளே தான்.... அவனது உயிருக்குயிரான ஜீவன்கள்.... நேற்று முழுவதும் ஒன்றுமில்லாமல்....

'செ.... எத்தென நாளிக்கு தான் இப்பிடி....' ஒரு முடிவுக்கு வந்தவன் போன்று எழுந்தவன் நெஞ்சை அகட்டி கைகளை ஒரு தரம் அகலவிரித்து வீசினான். எழுந்து நடந்தவன் வேலிக்கரையில் நின்ற வேம்பில் குச்சியை முறித்து வாய்க்குள் வைத்துச் சப்பினான். வெறுக்கத்தக்க கசப்பு நாவெங்கும் பரவியது. வாயில் கூடிய உமிழ்நீரை கறாப்பித் துப்பி விட்டு கண்டாயத்தை பார்க்க நடந்தான்.

"தேத்தண்ணி தாறென்குடிச்சுப் புட்டுப் போங்களேன்" பார்வதி சமையற்கட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான். இப்போ சில நாட்களாக அவள் அடுப்பு மூட்டுறது அதற்குத் தான்.... வெறும் சாயத்திற்காக மட்டும் தான்....

திரும்பி வந்தவன், குடத்து நீரை எடுத்து வாயை அலசிவிட்டு அதே மரக்குற்றியில் தன்னைச் சோரப் போட்டுக் கொண்டு பழைய படியும் அசைவற்று இருந்தான்.

தேனீர் நாக்கை நனைத்தது. 'வெறுமையான வவுத்தை நிரப்ப இந்த சாயத்தால எப்படித் தான் முடியுதோ....' பார்வதிக்கு வியப்பாக இருந்தது. முத்தனுக்கு முன்பாக ஒரு நாரையை போல கழுத்தை உள்ளுக்கு இழுத்து கால்களை மடக்கிக் கொண்டு அவளும் இருந்தாள்.

முத்தன் நிமிர்ந்து தனது மனைவியைப் பார்த்தான். பார்வதி முகம் மெலிந்து இளைத்துப் போயிருந்தாள். உதடுகள் இறுக்கமாக மூடியிருந்தன. தலையில் சில நரைகள் தெரிந்தன. வறுமை மனிதர்களை எப்படி எல்லாம் தின்று தீர்க்கிறது.

"பிள்ளைங்க எழும்பலையா"

"இன்னமும் இல்லீங்க" பார்வதி இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள் 'அதுவ எந்திருச்சு பசின்னா....' நினைக்கவே அவளுக்கு அழுகை வந்தது. இதயம் பாரமாக கனத்தது.

"நான் ஒருக்கா வெளியில போய்த்து வாறப்ப" அவன் வேகமாக நடந்தான். மனது உறுத்தியது. கால்கள் நடக்க முடியாமல் தயங்கின.

'பிள்ளைங்க எந்திரிச்சு அதுவ பசியின்னு அழுதா அதை எப்படித்தான் பொறுத்துக்கப் போறானோ....!' முத்தன் வீதிக்கு வந்து நடந்தான். 'வெடிஞ் செழும்பி மொத மொதலா... கடனுக்குப் போயிநிக்கிறது....' அவனுக்கு கூச்சலாகவும் அச்சமாகவும் இருந்தது. நடையில் சோர்வு புகுந்து கொண்டது. ஆனாலும் என்ன செய்வது....

தரிசாய் கிடந்த வயல் வெளிகளிற்கு நடுவில் பட்டிகள் பரவி நின்றன. வீதிக்கு அருகாக வாய்க்காலில் தண்ணீர் சத்தமிட்டு பாய்ந்து கொண்டிருந்தது. கட்டுக்குப் பழுதென்று குளத்து துலுசை யாரோ திறந்து விட்டிருந்தார்கள்.

செ... இதென்ன அநியாயம். வயல்கள் வெறுமையாய் கிடக்கின்றன. தண்ணி விழலுக்கு பாயுது... சீ... இது பெரும் கொடுமை.... வழமையான நாட்களென்றால்...! இப்போ உழவு காலம் இந்தச் சேத்து நிலத்தில் அவன் நீந்திக் கொண்டிருப்பான்.

1977. தமிழர் சிங்களவர் கலவரம் ஒன்று நடந்தது. அதை ஏன் தமிழர் சிங்களவர் கலவரம் என்று சொல்வான்? சிங்களவருக்கெதிராக தாங்கள் அழிபட்டுப் போகும் இறுதிக் கணம் வரைக்கும் எந்தத் தமிழனும் ஒரு துரும்பைக் கூட தூக்கவில்லையே?



சரி, அப்போது தான் அந்தச் சிங்கள மிருகங்கள் மனிதர்கள் மீது பாய்ந்த அந்த நாட்களில் தான் மாத்தளையிலிருந்து முத்தன் ஓடி வந்தான்.
ஐயோ! அதுவொரு பயங்கர இரவு. இருளில் தீப்பந்தங்களுடன் வந்த சிலர் அந்த தோட்டத்து லயன்கள் மீது மிருகங்களைப் போல் பாய்ந்தார்கள். அவலச் சத்தம் மலைகளில் மோதி மீண்டும் அவர்களின் காதுகளுக்கே திரும்பி வந்தது.

அதன் பின்பு, முத்தன் அவன் அப்பனையோ, தாயையோ அவனது அன்புக்குரிய தங்கையையோ காணவே இல்லை. எப்படியோ கூட்டத்தோடு கூட்டமாக வன்னிக்கு வந்து சேர்ந்தான்.

**இளவேனில்**

இங்குதான் என்ன? மாறுதல், ஒன்றுமில்லை. அங்கு கொழுந்து பறித்தவன் இங்கு அருவி வெட்டினான். பத்தாததற்கு மிளகாய்க்குள்ளும், வெங்காயத்திற்குள்ளும் நின்றான்.

அவனது வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவே இல்லை. ஆனாலும் இரண்டு வருடங்கள் கழிந்த போது அவன் ஒரு திறமையான கூலியாக மாறி இருந்தான்.

அந்த வருடம்தான் ... ஓர் அறுவடை காலம். காளியப்பன் தன் மகளை முத்தனுடன் இணைத்து வைக்க ஒப்புக் கொண்டான். பார்வதிக்கும் மனதிற்கு நிறைவாக இருந்தது.

கிராமத்து ஆண்டி அதன் முடிவோடு காட்டுத் துண்டை வெட்டி முத்தன் தனது வாழ்விடத்தை அமைத்துக்கொண்டான். விதானையாருக்கு அது அடியோடு பிடிக்காது விட்டாலும் எப்படியோ முத்தன் அங்கேயே இருப்புக்கொண்டு விட்டான்.

மனமொத்த தம்பதிகள் ... மகிழ்ச்சிக்கு என்ன குறைவிருக்கிறது.? அவர்கள் இருவரும் சேர்ந்தே வேலைக்கு சென்றனர். வயல்களிலும். தோட்ட நிலங்களிலும் வருடம் முழுவதும் அவர்களுக்கு வேலை இருந்தது.

பார்வதி அடுத்தடுத்து இரண்டு பெண் குழைந்தைகளுக்கு தாயானாள். அதன் பின்பு அவர்களுக்கு குழந்தைகள் கிடைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல முத்தனின் மனதில் புதிதாக ஓர் ஏக்கம் பற்றிக் கொண்டது. பார்வதியும் தான் அளவுக்கு அதிகமாக அதை விரும்பினாள். மனிதர்கள் எப்போதும் அப்படித்தானே. கிடைக்காததிற்காக ஏங்கித் தவிப்பது மனித இயல்பு தானே.

முடிவாக எட்டு வருடங்களின் பின்பு அவர்களுக்கு ஆண் குழந்தை கிடைத்தது. அதன் பின்பு முத்தன் பார்வதியை வயலுக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டான். மனைவியும் பிள்ளையும் அவனுக்கு புனிதப் பொருட்களாக போய் விட்டார்கள். அவன் வயல்களில் நின்றான். ஒரு மாட்டைப்போல ஓய்வு ஒழிசல் இல்லாமல் உழைத்தான்.

பார்வதியும் குழந்தைகளும்தான் அவனது உலகமாக போய்விட்டது. இப்போதெல்லாம் வெளியில் நேரத்தை செலவிடுவதை குறைத்து விட்டான். வேலை முடிந்ததும் வீட்டுக்கு வருவான். உடலை அவசரமாக கழுவி விட்டு பிள்ளைகளிடம் ஓடுவான்.

கடைசி மகன் அப்பாவின் மயிரடர்ந்த நெஞ்சில் ஏறுவான். உதைப்பான். தவளுவான். அப்பாவின் முகத்தில் அடித்து மயிரைப்பிடித்திழுப்பான். அவனது செல்லச்சிரிப்பும். தலையை ஆட்டிக்கதை சொல்லும் அழகும் முத்தனை இயக்கும் ஜீவசக்தியாக இருந்தது. அவர்களின் மகிழ்ச்சியான விளையாட்டுத் தான் அந்த குடிசை முழுமைக்கும் வெளிச்சத்தை வீசியது.

நாட்டில் இப்படி மாற்றங்கள் வரும் என்று யார் கனவு கண்டார்கள். பொருளாதாரத் தடை என்றார்கள். தமிழ் நிலத்திற்கு எனி எதுவுமே வராது என்றார்கள் முத்தனுக்கு விளங்கவில்லை.

'தமிழன்களெண்டால் அடி வாங்கணும், எப்போதும் அடிமையாய் இருக்கணும் எண்டு நினைக்கிறாங்க. செ.... இந்தக் கொடுமைய்ங்க எப்ப தொலையப் போவுது.' அவன் அடிக்கடி முணுமுணுத்தான்.

உழவுக்கு எண்ணெய் இருக்கவில்லை. அப்படியே உழுதாலும் பசளையோ கிருமி நாசினியோ கிடைக்கவில்லை. வயல் வெளிகள் தரிசாகின. தோட்டங்களும் கைவிடப்பட்டன.

பொருட்களின் விலையோ மலைபோல உயர்ந்தது. முத்தன் ஆடிப் போனான். வறுமை அவனது வீட்டை ஆக்கிரமித்து, பசியும் பட்டினியும் வீட்டிற்குள் இருப்புக் கொண்டன.

'நமக்கென்னா உணவு தேவையில்லை, மருந்து தேவையில்லை, ஏன்... உயிரே தேவையில்லை....' முத்தனின் நெஞ்சம் சிங்கள அரசின் கொடிய செயல்களை எண்ணிக் கொதிக்கும். வாழ்வை ஓட்டுவதற்கு அவன் போராடிப் பார்த்தான். உண்மையில் சொல்வதானால் அவனுக்கு பிழைப்புக்கு எந்த வழியுமே இருக்கவில்லை. காட்டுக்கு வேட்டைக்கு போனான். சில வேளைகளில் கிடைத்த உடும்பும், தேனும் வீட்டுக்கு சாப்பாடு போட்டது. ஆனால், ஒல்லியாய் சோர்ந்து போன கிழட்டு நாயால் அவனுடன் எப்படி வேட்டைக்கு போக முடியும்.

**சிறுகதை**

முத்தனின் கண்களுக்கு முன்பாகவே அவனது மனைவியும் குழந்தைகளும்.... பட்டினியுடன் போராடினார்கள். பிள்ளைகளின் நிலையைப் பார்க்க கவலை நெஞ்சைப் பிளக்கும். அவர்களை பார்க்காமல் விலகி ஓடப் பார்ப்பான், அது எப்படி முடியும்? தவிர்க்க வேண்டுமென்றே நினைத்துக் கொண்டே அது முடியாமல் கடைசி மகனைப் பார்ப்பான். அவனது கதைகள் சொல்லும் கண்கள் எங்கேயோ குழிக்குள் விழுந்து நெஞ்சு வற்றிப் போய் விலா எலும்புகள் வெளிக்கிளம்பி.... முத்தனின் கண்கள் கலங்கும். வேதனையை தாங்க முடியாமல் அவன் நெஞ்சம் தவிக்கும். அந்தக் குடிசையை விட்டு ஓடப் பார்ப்பான், பார்வதியின் பரிதாபமான பார்வை அவனைத் தடுத்து நிறுத்தும்.

இந்த நிலையில் ஒரு வருடம் எப்படி கடந்து போனது?

முத்தன் தொளில் கிடந்த துண்டை எடுத்து உதறிவிட்டு முகத்தை அழுத்தித் துடைத்தான்.

கடன்.. கடன்.. - எப்ப என்னென்று கொடுக்கப் போறன். அவனது உடல் ஒருதரம் நடுங்கியது.

"இஞ்சரப்பா இவன் முத்தன் வந்திருக்கிறான்" மணியத்தார் வழமை போல தனது மனைவிக்கு அறிவித்தல் விடுத்து விட்டு முத்தனை உற்றுப் பார்த்தார். அவன் வந்த நாட்தொடக்கம் அவருக்கு அவனும் ஒரு பிள்ளை.

"அம்மா ரெண்ணு மூணு நாளா... வீட்டில ஒண்ணுமில்லை.. பிள்ளையளும்...".
"எட படுபாவி, ஏன்ரா நேற்றே வரவில்லை" அந்தக் கிழவி திட்டிக்கொண்டே வீட்டுக்குள் போனாள். ஒரு துணிப்பையில் இரண்டு மூன்று கொத்து அரிசி.

"இந்தா கொண்டோடு, பிறகு வந்து கதை" முத்தன் நடந்தான். இல்லை ஓடினான். எது எப்படியோ அவன் கால்கள் நிலத்தில் படவில்லை.

எதிராக ஒரு பெண் தலைவிரி கோலமாக கையில் என்ன....? பார்வதி...?

"ஐயோ, ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க.. காப்பாத்துங்க" பார்வதி பதறிக் கொண்டிருந்தான்.
ஆசுபத்திரி பதினாலு கட்டைக்கு அங்கிட்டு இப்ப எப்படி... திரும்பவும் முத்தன் ஓடினான்.
வைத்தியசாலைக்கு,
அந்த அனுபவம் மிகுந்த நரை விழுந்த வைத்தியர் அமைதியாக மரணத்தைத் தேடிப் போகும் எந்த மனிதரையும் காப்பாற்றும் வலுவற்று நடந்து கொண்டிருந்தார்.

"ஐயா எண்ட பிள்ளையை காப்பாத்துங்க"
வைத்தியர் மெதுவாக முத்தனின் பிள்ளையைத் தூக்கி நன்றாகப் பார்த்தார். கண்கள் குழிவிழுந்து, விலா எலும்புகள் சிரிக்க கால்கள் சூம்பிப் போய்... வயிறு மட்டும் வற்றாமல்... வறுமை அவனைக் கொல்கின்றது. இல்லை, தமிழ்க் குழந்தை என்பதற்காக அவன் சாகடிக்கப்படுகின்றான்.

அந்தக் கிழவரின் கண்கள் கலங்கியது. குழந்தையை வளர்த்தி விட்டு விலகி நடந்தார்.

"ஐயா. கையை விரிச்சுப் பிடாதீங்க. ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க" பார்வதி கதறி அழுதாள்.

வைத்தியர் திரும்பியும் பாராமல் நடந்து கொண்டிருந்தார். கால்கள் பின்னித் தள்ளாடின. அவர் விழுந்து விடுவார். அருகில் வந்த தாதி ஒருத்தி அவரைத் தாங்கிப் பிடித்தாள் அவரின் கண்களில்...

"ஐயா அந்தப் பிள்ளை தயக்கத்துடன் அவள் வார்த்தைகள் வெளிவந்தன" அந்தக் குழந்தையை சாகவிட எனக்கு விருப்பமில்லை. அந்தக் குழந்தையை மட்டுமல்ல இங்கு யாரையுமே சாகவிட எனக்கு விருப்பமில்லை. ஆனா... எதை வைச்சுக் கொண்டு நான் யாரை காப்பாத்துறது. இந்த ஆஸ்பத்திரி முழுவதும் தேடி எங்காவது மருந்திருந்தா கொண்டுவா. நான் எல்லோரையும் காப்பாத்துறன்" வைத்தியர் நடந்து கொண்டிருந்தார்.

"ஐயோ ஏண்ட பிள்ளை போட்டானே" காற்றில் படர்ந்த பார்வதியின் குரல் அவரின் இதயத்தில் பாரமாக கனத்தது. ■

# நிகழ்வும் நினைவும்

திலீபன்

# சக பத்திரிகையாளருக்கு .... உண்மையை எழுதுவோம்

அண்மையில் தமிழீழம் சென்று திரும்பிய எனது இரு நண்பர்களைக் கடந்த வாரம் சந்தித்தேன். தமிழீழ மண்ணில் தற்போதைய நிலமை தொடர்பாக இவர்கள் நிறையவே எடுத்துச் சொன்னார்கள்.

இவர்களில் ஒருவர் கடந்த தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரையும், மற்றவர் வைகாசி ஆனி மாதங்களிலும் தமிழீழ மண்ணில் தங்கியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ மக்கள் எவ்வளவு தூரம் உணர்வு பூர்வமாக பங்கு கொள்கின்றார்கள் என்பதனை பல்வேறு உண்மை நிகழ்வுகள் மூலம் படம் பிடித்துக் காட்டினார்கள் இவ்நண்பர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்பாகவும் வெளிநாடுகளில் ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் அவதூறுப் பிரச்சாரங்களுக்கு உண்மை நிகழ்வுகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை தெளிவாக குறிப்பிட்டு, இத்தகைய அவதூறுகளைப் பரப்புபவர்கள் தொடர்பாக தமது அதிருப்தியினையும் ஆத்திரத்தினையும் வெளிப்படுத்திக் கொண்டனர்.

இச் சந்தர்ப்பத்தில், விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான அவதூறுகள் பரப்பப்படுவதற்கான பிண்ணனிகள் தொடர்பாக நாம் கலந்துரையாடிக் கொண்டோம்.

எமது உரையாடல் விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு பரிமாணங்கள் தொடர்பாகவும் விரிந்து சென்றது. தமிழீழ மண்ணில் ஏற்பட்டுவரும் ஆரோக்கியமான மாற்றங்கள் குறித்து எனது நண்பர்கள் தெரிவித்த தகவல்கள் புதிய உற்சாகத்தினைக் அளித்தது.

இந்நேரத்தில், இரு மாதங்களுக்கு முன் நான் சந்தித்த யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித்த கூற்று எனது மனதினை ஆக்கிரமித்துக் கொண்டது.

"எங்களைப் போலவோ, உங்களைப் போலவோ அல்ல; தமிழீழ மண்ணில் ஓர் உறுதியான தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கின்றது." என்பதே அக்கூற்றாகும்.

எனது நண்பர்கள் தெரிவிக்கும் கருத்துகளும் பேராசிரியரின் இக்கூற்றை உறுதிசெய்துகொண்டன.

அப்போது, கையில் ஒரு பத்திரிகையுடன் வேலை முடிந்து வந்த இன்னொரு நண்பரும் எமது உரையாடலில் கலந்து கொண்டார்.

நாம் பல்வேறு விடயங்களையும் உரையாடிக் கொண்டிருக்கும்போது "ஏன் இப்படி பொய்யை எழுதுறாங்கள்?" என்று உரக்கச் சத்தமிட்டார், தமிழீழ மண்ணில் ஆறு மாதங்கள் தங்கி நின்று வந்த எனது நண்பர்.

நாம் எமது உரையாடலை நிறுத்திவிட்டு அவரை நோக்கிய போது, இறுதியாக எம்முடன் இணைந்த நண்பர் கொண்டுவந்த பத்திரிகையில் அவர் கவனம் பதிந்திருந்ததைக் கண்டோம்.

அது இலண்டனில் இருந்து இரு வாரத்துக்கொரு முறை வெளியாகும் ஒரு தமிழ்ப் பத்திரிகை. அப்பத்திரிகையில் 'துர்க்கை அம்மன் ஆலயக் கோபுரத்திலிருந்து பையன்கள் இராணுவத்தினரை நோக்கிச் சுட்டதாக' ஊரிலிருந்து வந்த கடிதம் தெரிவித்திருப்பதாகப் பிரசுரிக்கப்பட்ட விடயம் தொடர்பாகவே அவர் தனது ஆத்திர உணர்வினைத் தெரிவித்தார்.

"இச் சம்பவம் நடந்தபோது நான் யாழ்ப்பாணத்தில் நிண்டனான். துர்க்கை அம்மன் கோயில் கோபுரம் 'செல்' அடியில் சேதமாகவில்லை. அண்டைக்கு பெரிய சண்டை எதுவும் நடக்கேல்லை.

இயக்கப் போராளிகள் கோபுரத்திலிருந்து சுட்டதாக எழுதியிருக்கிறது சுத்தப் பொய். அப்படி ஒரு சம்பவமும் நடக்கவில்லை. சிறீலங்கா விமானப் படை போட்ட குண்டுகளாலேதான் கோயிலும் கோபுரமும் சேதமடைந்தது. போராளிகள் கோபுரத்திலிருந்திலிருந்து இராணுவத்தினரை நோக்கிச் சுட்டதாக ஏன் எழுதி இருக்காங்களோ தெரியாது.

சிறீலங்காப் படை கோயில்களுக்கு குண்டு போடுறது ஒன்றும் புதிசில்லை. முந்தியும் கன கோயில்களுக்கு குண்டு போட்டிருக்கிறாங்கள். போராளிகள் சுட்டதாலதான் கோபுரமும் கோயிலும் சேதமடைஞ்ச மாதிரி எழுதியிருக்கிறது பொறுக்கித்தனம். இது எதிரியின்றை ஒடுக்குமுறைக்கு துணைபோற வேலை.

உண்மையா இந்தக் கடிதம் ஊரில இருந்துதான் வந்ததா எண்டதிலை எனக்கு சந்தேகமிருக்கு. அப்படி ஊரில இருந்து வந்திருந்தாலும் இதை எழுதின ஆளின்ர நோக்கம் பிழையாத்தான் இருக்க வேண்டும்"

இவ்வாறு படபடவென்று பொரிந்து தள்ளினார் அவ் நண்பர்.

தமிழீழ மண்ணில் இரு மாதங்கள் தங்கியிருந்த நண்பரும், இக்கருத்தினை பலமாக ஆமோதித்தார்.

"துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது விமானப் படை குண்டு போடேக்கை நானும் யாழ்ப்பாணத்திலை தான் நிண்டனான். துர்க்கை அம்மன் கோயில் பகுதிக்கும் போய் வந்தனான். போராளிகள் கோபுரத்தில் இருந்து சுட்டதாக ஒரு சின்னக் கதை கூட நான் கேள்விப்படவில்லை" என்றார் அவர்.

என்னால் இவரது துடிப்பினை உணர்ந்துகொள்ள முடிந்தது. தாம் தமிழீழ மண்ணில் நிற்கும்போது நடைபெற்ற சம்பவம் தொர்பாக பொய்யான தகவல் ஒன்று, ஊரில் இருந்து வந்த கடிதம் என்ற பெயரில் பிரசுரமாகியிருப்பது குறித்த இவரது ஆத்திரமும் நியாயமானதே.

பொதுவாக, வெளிநாடுகளில் ஊரிலிருந்து கிடைக்கும் தகவல்களை உண்மை என நம்பும் நிலையுண்டு. இவ்வாறு ஊரிலிருந்து கிடைக்கும் தகவல்கள் பொய்யாக இருந்தால் கூட அது பொய்யா அல்லது உண்மையா என பகுத்தாய்வு செய்து கொள்ள எல்லோராலும் முடிவதில்லை.

இத்தகைய சூழ்நிலையில் பொய்யான தகவல்களை பொறுப்புணர்வுள்ளபத்திரிகைகள் வெளியிடக் கூடாது. ஊரிலிருந்து கிடைக்கும் கடிதங்கள் உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளதா என்பதை பகுத்தாய்வு செய்யவேண்டிய கடமை பத்திரிகைகளுக்கு உண்டு.

இதனை எண்ணியவாறு அப்பத்திரியினை எடுத்துப் புரட்டினேன். தமிழ் தேசிய நலன் என்ற நோக்கு நிலையில் இருந்து பார்க்கும் போது பலத்த விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டிய சில விடயங்களும் அப்பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன. 'வாளின் முனையை விட பேனாமுனை கூரானது' என நெப்போலியன் சொன்னதாக குறிப்பிடுவார்கள். என்னைப் பொறுத்தவரை அப்பேனாமுனை சத்தியத்தினையும் உண்மையினையும் கொண்டவர்களின் கையில் இருக்கும்போது மட்டும் தான் இக்கூற்றுடன் உடன்பட்டுக் கொள்வேன்.

சுய புராண நோக்கினையும் வியாபார நோக்கினையும் கொண்டவர்களின் கையில் பேனா இருக்குமாக இருந்தால் அது சமூகத்திற்கு அழிவினைத் தான் தேடித்தரும். சகல பத்திரிகையாளர்களும் இதனை உணர்ந்து செயற்படுவார்களா? ■

## இரண்டேமணி....

முடியாத நிலையில் விமானப் படை இருப்பதாக சிறிலங்காவின் விமானப்படைத் தளபதி டெரன்ஸ் குணத்திலக்காவின் செய்திகளை மேற்கோள் காட்டி கொழும்பில் செய்தி வெளியாகி உள்ளது. 125 பேர் பிரயாணம் செய்யக்கூடிய 80 கோடி ரூபா பெறுமதியான இவ் Y8 விமானத்தில் 61 ஆயிரம் கிலோ எடையுள்ள பொருட்களை மிகச்சுலபமாக எடுத்துச் செல்லலாம். 10 மணி 40 நிமிடங்களுக்கு போதுமான எரிபொருள்களை தன்னகத்தே நிரப்பிக் கொண்டு 497 மைல் மணி வேகத்தில் பறக்கும் ஆற்றல் இதற்குண்டு. இவ்விமானத்தை ஒரு குண்டு துளைத்திருக்க வேண்டுமென முன்னால் சிறிலங்கா விமானப்படைத் தளபதி கரி குணதிலகா ஊர்ஜிதம் செய்துள்ளார். 123 கோடி ரூபா மதிப்புள்ள சாலி 130 விமானம் இரண்டை உடன் வாங்கினால் மட்டுமே தம்மால் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஈடுபட முடியுமென சிறிலங்கா விமானப்படை தளபதி டெரன்ஸ் குணதிலகா அரசுக்கு இரகசிய அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளார். இவ்வறிக்கையில் "மேலும் 8 சியாமா செட்டடி விமானங்களைக் கொள்வனவு செய்வது அவசியம்" எனவும் அவர் சிறிலங்கா அரசுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

## சீன தொழில் நுட்பவியலாளர்

சிறிலங்கா விமானப்படை வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் மேல் பறப்பதற்கு அச்சம் தெரிவித்ததை அடுத்து, கடல் வழியாக இராணுவ வழங்கல்களைத் தொடங்கியுள்ளது. இதற்காக 150 கோடி ரூபா பெறுமதியான மூன்று புதிய சீனப் பீரங்கிப் படகுகளை சிறிலங்கா கடற்படை பணியில் ஈடுபடுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது. இதற்கிடை சீன தொழினுட்ப வல்லுனர்களை நேடியாகவே திருமலை கடற்படைத் தளத்திற்கு கொண்டு சென்று பழுதடைந்த கப்பல்களைத் திருத்துவதாக திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாணயம் வீழ்ச்சி

இது ஒரு புறமிருக்க யுத்த சூழ்நிலை காரணமாக கூட்டு மொத்தமாக சிறிலங்காவின் நாணய மதிப்பு மேலும் வீழ்ச்சியுறத் தொடங்கியுள்ளது யூ. எஸ். டொலர் பெறுமதியில் இலங்கை நாணயத்தின் மதிப்பு மேலும் 5.9% வீதம் வீழ்ச்சியடையப் போவதாக "எகெனோமிக் ரிவீயூ 1991" பொருளாதார சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

## தமிழீழ பெண்....

நடாத்தப்பட வேண்டும் என்ற பல்லாயிரக்கணக்கான உலகப் பெண்களின் அபிலாசைகளை-தவிப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமிழீழ இளம் பெண் போராளிகள் தங்களது பங்களிப்பை தாராளமாக வழங்கியுள்ளனர்.

இவ்விதம் உலகப் பெண்கள் மத்தியில் தீவிர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இவர்கள் தங்களை முன்னுதாரணமாகக் காட்டியுள்ளனர். இன்று தமிழ் மக்கள் ஒரு போர் நெருக்கடிக்குள் வாழ்ந்தபடி தமது அன்றாட வாழ்க்கையை நடாத்தவே திண்டாடும் ஒரு சூழ்நிலைக்குள் இருந்தாலும் கூட இந்தப் போர் யதார்த்தத்திலிருந்து ஒருவரும் தப்பமுடியாது.

எம் கண் முன்னே மக்களின் புதிய வரலாறு படைக்கப்படுகின்றது. இவை இதய ஒலிகளால் செதுக்கப்படும் உன்னத வரிகள். இது தமிழீழப் பெண்களால் படைக்கப்படுகின்றது. இதன் நினைவும்-உணர்வும் தமிழினத்தின் ஒவ்வொரு நெஞ்சத்தையும் பெருமிதத்தில் ஆழ்த்தி நிற்கும் வரலாற்றின் உருவாக்கம் என்பது உறுதி பெறுகின்றது. ■


தமிழீழத்தின் நிகழ்வுகளின் தாயக உணர்வின்மீட்பு!



தரிசனம்

பார்வை 5

ஆதரவைத்தேடும் சிறுவர்களின் " செஞ்சோலை " (விவரணச் சித்திரம்)

"இனியொரு விதி ...." (நாடகமொன்றின் ஒளியாக்கம்)

"மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு" (ஒரு நினைவு மீட்பு)

"பூவிதழ் சிரிப்பினில் பூகம்பம் வெடித்ததோ" கரும்புலி போர்க்

ஒளியாக்கம் தரும் தமிழீழ உணர்வு
தெளிவாக்கும் நம் சிந்தனை அலைகளை
கலையாக்கம் அபாரமென மக்கள் பாராட்டு!
நிலையாக இருக்கவேண்டும் தமிழீழ மக்களிடம்!

சொற்ப பிரதிகளே கைவசமுண்டு
இன்றே வாங்க முந்துங்கள்!

■ பத்திரிகையின் கடைசிப் பக்கத்திலுள்ள அலுவலக முகவரிகளில் பெறலாம்.

# உலகத்தமிழா ஒருமுறை திரும்பு

பங்கயமணாளன்

ஆடித்திங்கள் எண்பத்து மூன்றில்.....
அழிவுக் கங்கை மண்ணிலே பாய்ந்தாள்!
ஊழித்தீபோல் பற்றிய நெருப்பில்....
உடமைகள்.... உடல்கள் கருகிப்போயின!
ஓடித் தமிழன் பாரின் எல்லையில்
ஒருசாண் புழுவாய்க் குருதியில் தோய்ந்தான்!

தேடித் தமிழன் வீடுகள் புகுந்து....
தெருநாய் போலச் சுட்டிட மாண்டான்!
நாடில்லாது.... நாதியில்லாது....
ஈழத் தமிழன் இன ஒழிப்புற்றான்!



ஒருபத்தாண்டுகள் ஓடி நிறைய
உலகச் செய்தியில் தமிழன் நிறைந்தான்
உரிமைப் போரினில் உறுதியாய் நின்று
தன்தாய் நிலத்தினை மீட்டிட விரைந்தான்
தர்மத்தாயின் மகனாம் ஒருவன்
தமிழர் படையின் தலைவனும் ஆனான்
தரணியின் மேனியிற் தமிழனின் நாடு
வரைந்திடும் சுதந்திரச் சிப்பியாய் நின்றான்!
மானச் சங்கினை ஊதி உலகினில்....
வாழும் தமிழனின் ஒளிவிளக்கானான்
குன்றும்.... கடலும்.... காடும் கடந்து
நின்று போரிடும் நீள்வரம் பெற்றான்
சென்றுவா! பகை வென்றுவா!.... எனும்

வீரசரித்திரம் மீண்டும் தொடுத்தான்
நன்றும் தாயுமாய்க் களத்தினிற் பகைவரைக்
கொன்று குவித்திடும் காட்சியும் கொடுத்தான்
இழப்பு எத்தனை? இன்னல்கள் எத்தனை?
இரத்த வேள்வியின் அனுபவம் எத்தனை?
இதற்கு மத்தியில் எமது மக்களே
உறுதி பூண்டனர் விடுதலை வேட்கையால்!
கிழக்கு வெளுத்திடும்; தமிழர் நிலத்திலே....
உதிக்கும் சூரியன் என்ற இலக்கிலே....
நடக்கும் பயணத்தில்....
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!
சத்தியம் நின்று பதில்தனைச் சொல்லும்
உலகத் தமிழா ஒருமுறை திரும்பு
உறுதி எடுத்தால் பகைவர்கள் துரும்பு!....


U.T.O
54 Tavistock Place
London WC1H 9RG
Tel: 071-837 7162
Fax: 071-278 5666

T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
France
Tel: 435 81142
Fax: 435 81141

Tamil Confederation
P.O.Box 340251
5270 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo
Italy
Tel/Fax: 091-611 3179

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1
Norway
Tel: 02-191260
Fax: 02-190114

W.T.C.C
Hofjecklin
7415 Rodels
Switzerland
Tel: 077-816609

W.T.C.C
P.O.Box 694
Mulgrave North
Victoria 3170, Australia
Tel: 03-457 6347
Fax: 03-561 8224



Printed by Observer Group Newspapers.